# கற்பிழந்த கார்பன் காப்பி



ராஜேஷ்குமார்

## 1



நட்சத்திரா நர்ஸ் யூனிபார்மிலிருந்து சாதாரண வாயல் சேலைக்கு மாறிக் கொண்டிருந்த நிமிஷம் நைட் ட்யூட்டிக்கு வந்த நர்ஸ் காமினி அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

''நட்சத்திரா...''

''ம்...''

சேலைக்கு கொசுவம் வைத்துக் கொண்டிருந்த நட்சத்திரா திரும்பினாள். ''என்னடி...?''

''உன்னை டாக்டர் தாமோதர் கூப்பிடறார்...''

''டியூட்டி முடிஞ்சு வீட்டுக்குப் போற நேரத்துல எதுக்காக கூப்பிடறார்...?''

''யாருக்குத் தெரியும்...''

''டாக்டர் எந்த ரூம்ல இருக்கார்?''

''அதுவும் தெரியலையே... லைம் பாக்ஸ்ல எக்ஸ்ரே படங்களைப் போட்டுப் போட்டு பார்த்துக்கிட்டே.... 'நட்சத்திராவை ஒரு நிமிஷம் வரச் சொல்லு'ன்னு சொன்னார்... சொல்லிட்டேன்... போறதும் போகாததும் உன்னோட இஷ்டம்...''

''போகாமே இருக்க முடியுமா...? மாசமானா முன்னூறு ரூபாயை சம்பளமா தர்றவராச்சே...?'' சொல்லிக் கொண்டே சேலைக் கொசுவத்தை இடுப்பில் செருகினாள் நட்சத்திரா. காமினி அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''என்னடி பார்க்கிறே...?''

''கல்யாணமாகி ஒரு குழந்தையைப் பெத்த பின்னாடியும் உடம்பை அட்டகாசமா வெச்சிருக்கே...''

''கண்ணு போடாதே...''

''போடாமே இருக்க முடியலையே... என் கூடப்பொறந்த ஒருத்தி மாலான்னு பேரு... கல்யாணம் பண்ணித் தரும்போது பெங்களூர் தக்காளி மாதிரி தளதளன்னு... இருந்தா... அடுத்த வருஷமே ஒரு குழந்தையைப் பெத்து தூக்கிட்டு வர்றா... கண் கொண்டு பார்க்க முடியலை...''

''ஏன்?''

நட்சத்திரா சிரித்தாள்.

''அதையும் அந்த வேலைக்காரி சென்னம்மா சொல்லிட்டாளா...?''

''அவளுக்கு உன்னோட வீட்டு விஷயம் மட்டுமில்லை. அந்தத் தெருவில் இருக்கிற எல்லா வீட்டு விஷயமும் தெரியும்... டி.வி. ஸ்டேஷன் டைரக்டரா போடற அளவுக்கு... அவகிட்ட க்வாலிபிகேஷன் இருக்கு...''

நட்சத்திரா சிரித்துக் கொண்டே வெளியே வந்தாள். நர்சிங் ஹோம் ரிசப்ஷன் ஹால் கடிகாரத்தில் மணி 5.10 ஆகியிருந்தது.

'இந்நேரம் நெம்பர் லெவன் ஸ்டாப்பிங்கிலிருந்து புறப்பட்டிருக்குமே... அந்த பஸ்ஸை விட்டால்... அடுத்த பஸ் அஞ்சரை மணிக்குத்தான்... அதில் ஏறினால் வீடு போய்ச் சேர ஆறு மணியாகி விடும். பத்து நிமிஷம் லேட்டானாலே மாமியார்க்காரி 'உர்ராங் உடான்' மாதிரி முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாள். ஆறு மணிக்குப் போனால் கேட்கவே வேண்டாம்... வாயிலிருந்து விஷம் தோய்ந்த சைஸில் வார்த்தைகள் சின்னச் சின்ன கத்திகளாய் பாயும். மாமனார் ஒரு பக்கம் முனகுவார். கணவன் ரமேஷ் தன் பங்குக்கு எரிந்து விழுந்து அம்மாக்காரியின் வயிற்றில் பாலை பாய்ச்சுவான்.'

'ஊஹூம்... கூடாது!' ... தவறவிடவே கூடாது...!'

'அந்த லெவன் பஸ்ஸை தவறவிடவே கூடாது...!'

சேலையை லேசாய் உயர்த்திப் பிடித்துக் கொண்டு நர்சிங் ஹோமின் படிகளில் வேகமாய் இறங்கி ரோட்டுக்கு வந்தாள். ரோட்டில் சாயந்தர நேர கலகலப்பு தொற்றியிருந்தது. தலைக்கு மேலே ஆகாயம் அழுக்கான மேகங்களோடு அலைந்து மழை பெய்யலாமா வேண்டாமா என்று யோசித்தது.

தொலைவில் தெரிந்த பஸ் ஸ்டாப்பை நோக்கி ஓடினாள் நட்சத்திரா. பஸ் ஸ்டாப்பில் ஏதோ ஒரு பஸ் நின்றிருந்தது.

'அது நெம்பர் லெவன் தானா...?'

உற்றுப் பார்த்தாள். நெம்பர் லெவன் தான். 'அம்மாடி! அத்தையின் அசுர வாயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்'. பஸ்ஸை நோக்கி ஓடினாள்.

அவள் பாதி வரும்போது ஸ்டாப்பிங்கில் நின்றிருந்த பஸ் மெதுவாய் நகர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் எடுத்தது.



நட்சத்திரா கையைக் காட்டினாள். பஸ் அவள் வேண்டுகோளைப் புறக்கணித்து வேகம் எடுத்தது. முன்புறக் கண்ணாடி வழியாகத் தெரிந்த டிரைவர் அவளைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே போனான். அந்த டிரைவரை அவளுக்குத் தெரியும். பஸ் ஸ்டாப்பில் வண்டியை நிறுத்தாமல் கொஞ்சம் தள்ளிப் போய் வண்டியை நிறுத்தி விட்டு பெண்கள் ஓடிவரும் அவலத்தை அவன் ரசிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு நட்சத்திரா ஒருமுறை அவனோடு சண்டைக்குப் போயிருக்கிறாள்!

''இப்படிப் பெண்களை ஓட விடறதுல உனக்கென்ன லாபம்...?''

''பஸ் ஸ்டாப்புல எக்கச்சக்கக் கூட்டம்... அதான் தள்ளி நிறுத்தறேன்... மகாராணி கொஞ்ச தூரம் ஓடி வந்து ஏறக்கூடாதா?''

''நான் ஓடி வரத் தயார்... வயசானவங்களும், கைக்குழந்தைகளை இடுப்புல வெச்சுக்கிட்டிருக்கற பெண்களும் எப்படி ஓடி வ்ருவாங்க...?''

''அவங்க ஓடி வர வேண்டாம்... அடுத்த பஸ்ஸில வரட்டும்...''

''நீயும் ஒரு பொண்ணோட வயத்திலிருந்துதான் பொறந்திருப்பேங்கிறதை ஞாபகம் வெச்சுக்க... உங்கம்மாவையும் நீ இப்படித்தான் ஓட வெச்சி ஏற வெப்பியா...?''

''இதோ... பார்... இந்த செண்டிமென்ட் டயலாக்கெல்லாம் என்கிட்டே வேண்டாம்... உனக்கு இஷ்டமிருந்தா பஸ்ஸில ஏறு... இல்லேன்னா கீழே இறங்கிடு... அநாவசியமா பேசிட்டிருக்காதே...''

''நான் உன்னோட கம்பெனிக்கும், போலீஸுக்கும் கம்ப்ளெய்ண்ட் லெட்டர் எழுதப் போறேன்...''

''தாராளமா எழுது... கைவசம் நாலைஞ்சு பேப்பர் காலியாயிருந்தா காப்பி டு சி.எம்., காப்பி டு பி.எம்., காப்பி டு ஜனாதிபதிக்கும் போடு... சீக்கிரமே நியாயம் கிடைக்கும்...''

அன்றைக்கு எகத்தாளம் பேசிய அதே டிரைவர் அவளைப் பார்த்து கொட்டை கொட்டையாய் சிரித்துக் கொண்டு பஸ்ஸை விரட்டினான்.

'ராஸ்கல்! இவன் நிறுத்த மாட்டான்' சோர்வாய் யோசித்துக் கொண்டே பஸ் ஷெல்டர்க்கு வந்தாள். பக்கத்து சினிமா தியேட்டரில் மலையாளப் படம் முடிந்திருக்க கும்பல் ஷெல்டரை மொய்த்திருந்தது.

இவளைப் பார்த்ததும் இரண்டு கல்லூரி மாணவர்கள் 'தீபா மாதிரி இல்லே?' என்று பேசிக் கொண்டார்கள். ஒருவன் விடாப்பிடியாய் வெறித்தான். லுங்கிப் பேர்வழி ஒருவன் பீடியை வாய் நிறைய இழுத்து பக்கத்தில் நின்றிருந்த ஒரு பெரியவரின் முகத்தில் சின்ன மேகமாய் தவழ விட்டான். நீல நிற தாவணியில் இரண்டு பிரசன்டேஷன் கான்வென்ட் மாணவிகள் புது சினிமா பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

நட்சத்திரா ஓரமாய் தள்ளி நின்று கொண்டாள். மனசுக்குள் வீட்டு பயம் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

சரியாய் 5.30 மணிக்கு 11ஏ ஒரு ஜனக் கொத்தை சுமந்து கொண்டு வந்தது; நின்றது. நட்சத்திரா நகங்கிக் கொண்டே கும்பலோடு கும்பலாய் பஸ்ஸில் ஏறி... சுவாசிக்க காற்றில்லாமல் திணறினாள். நல்லவேளையாய் அவளுக்கு இரண்டு பக்கமும் பெண்கள்தோள்பட்டையை உரசும் எருமை மாடுகளோ இடுப்பை இடிக்கும் இடி ராஜாக்களோ இல்லை.

பஸ் ஊர்ந்தது- அவள் இறங்க வேண்டிய சாயிபாபா காலனி பஸ்ஸ்டாப் வந்தபோது மணி சரியாய் ஆறு.

தவிப்பும் பதட்டமுமாய் பஸ்ஸிலிருந்தும் இறங்கி வேக வேகமாய் நடந்து ஒரு ஐந்து நிமிஷத்தை நடையில் கரைத்து அழகேசன் தெருவில் இருக்கும் அந்த முதல் வீட்டுக்குள் நுழைந்தாள்.

ஈஸிச் சேரில் உட்கார்ந்து பேப்பர் ஒன்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மாமனார் புன்சிரிப்போடு நிமிர்ந்தார்.

"வாம்மா..."

வீட்டின் உள்ளேயிருந்து குழந்தை சங்கீதாவை இடுப்பில் சுமந்தபடி மாமியார் ஞானாம்பாள் வந்தாள். அவளுடைய சதைப் பிடிப்பான முகத்திலும் சிரிப்பு தொற்றியிருந்தது.

"என்ன நட்சத்திரா... பஸ் கிடைக்கலையா...?"

"ஆமா... அத்தே..."

"இந்த பஸ் கம்பெனிக்காரங்க... ரெண்டு பஸ்ஸை சேத்து விட்டா என்னவாம்...; நீ போய் மூஞ்சியைக் கழுவிட்டு வாம்மா... நான் காப்பி கலந்து வெக்கிறேன்..."

நட்சத்திரா மாமியார்க்காரியை ஆச்சர்யமாய்



பார்த்தாள். அதே ஆச்சர்யம் விலகாத கண்களோடு தன் அறைக்குள் நுழைந்து சுவர் ஆணியில் வானிடி பேக்கை மாட்டினாள்.

கட்டிலில் உட்கார்ந்து ஒரு வார இதழைப் புரட்டிக் கொண்டிருந்த கணவன் ரமேஷ் வழக்கத்துக்கு அதிகமான புன்னகையோடு அவளை ஏறிட்டான். நட்சத்திரா அவன் அருகே போய் உட்கார்ந்து குழப்பமான குரலில் கேட்டாள்.

"இன்னிக்கு நம்ம வீட்ல என்னங்க விசேஷம்? எல்லாரும் ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க...!"

ரமேஷ் அவளுடைய கன்னத்தை தட்டினான்.

"சந்தோஷத்துக்கு காரணமே நீதான்..."

"நானா...?"

"நீயேதான்... போய் மூஞ்சியைக் கழுவிட்டு வா... சொல்றேன்..."

"சஸ்பென்ஸ் வெக்காதீங்க... இப்பவே சொல்லுங்க..."

"நோ... நோ... நீ மொதல்ல மூஞ்சி கழுவி கொஞ்சம் ஃபிரஷ்ஷா... வா... அப்பத்தான் சொல்லுவேன்."

அவளை எழுப்பி பாத்ரூமுக்கு துரத்தினான் ரமேஷ். நட்சத்திரா, வீட்டில் நிலவும் அந்த திடீர் சந்தோஷத்துக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் குழப்பமாய் பாத்ரூமை நோக்கி நகர்ந்து போனாள்.



## 2

மகளிர் மறுவாழ்வு இல்லம், மம்சாபுரம், ராஜபாளையம்.

கோணல் மாணலான எழுத்துக்களோடு பெயிண்ட் உதிர்ந்து போன போர்டு ஒன்று தென்காசி ரோட்டில் நீட்டிக் கொண்டிருக்க போலீஸ் ஜீப், போர்டு சொன்ன வழியில் திரும்பியது. ஜீப்பின் பின் பக்கத்தில் அந்த நான்கு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். முன்சீட்டில் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் முருகேஷ் ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவரிடம் கேட்டார்.

''மெயின் ரோட்டிலிருந்து 'மறுவாழ்வு இல்லம்' எவ்வளவு தூரம்?''

''ஒரு கிலோமீட்டர் இருக்கும் ஸார்...''

''இந்த ஏரியா பார்க்கிறதுக்கு ரொம்பவும் ட்ரையா இருக்கே... இந்த இடத்திலயா அந்த 'மறுவாழ்வு இல்ல'த்தைக் கட்டியிருக்காங்க....?''

''அந்த இல்லம் ஒரு ட்ரஸ்ட்டுக்கு சொந்தமானது ஸார்... கவர்மெண்ட் மான்யமும் இருக்கு... ஆனா உள்ளே பூந்து பார்த்தா நிறைய ஊழல்...''

''அங்கே இருக்கிற எல்லா பெண்களுமே ரெட் லைட் ஏரியாவில் கைது பண்ணப்பட்ட பெண்கள் தானா?''

''ஆமா... ஸார்...''

''மொத்தம் எத்தனை பேர் இருப்பாங்க?''

''போன தடவை ரெண்டு பெண்களை நான் இங்கே கொண்டு வந்து விடறப்போ இருநூறு பேர்க்கு மேல இருந்தாங்க ஸார்...''

''பெண்களோட மறுவாழ்வுக்காக அங்கே என்னென்ன பண்றாங்க..?'' இன்ஸ்பெக்டர் கேட்டதும் டிரைவர் சிரித்தார்.

''அந்தக் கொடுமையை ஏன் ஸார் கேக்கறீங்க...? இங்கே வர்ற ஒவ்வொரு ஒழுக்கம் கெட்ட பெண்ணும் மூணு மாசம் வரைக்கும் திருக்குறள் படிப்பா... தினசரி பிரார்த்தனை பண்ணுவா... நீதிபோதனை கதைகளை சொல்லுவா... மூணு மாசம் ஆனதும் 'அவ இனிமே பழைய வாழ்க்கைக்குப் போக மாட்டாள் என்கிற நம்பிக்கை ட்ரஸ்ட்டுக்கு ஏற்பட்டதினால் அவளை இல்லத்திலிருந்து வெளியே அனுப்புகிறோம்' என்று சொல்லி புரோக்கர்கிட்டே ஒரு கணிசமான அமௌண்ட்டை வாங்கிக்கிட்டு விட்டுடுவாங்க... அவ மறுபடியும் தொழிலை ஆரம்பிச்சு... போலீஸ் கையில சிக்கினதும் திரும்பவும் இங்கே வந்துடுவா... பழையபடியே திருக்குறள் படிப்பா... பிரார்த்தனை பண்ணுவா...''

ஜீப் 'மகளிர் மறுவாழ்வு இல்ல'த்தின் காம்பௌண்ட் கேட் வாசலை நெருங்கியது. ஜீப்பின் முகத்தைப் பார்த்ததும் வாட்ச்மேன் கதவைத் திறந்து விட்டான். ஜீப் உள்ளே போய்க் கொண்டிருக்கும் போதே இன்ஸ்பெக்டர் முருகேஷ் பார்வையைச் சுற்றிலும் ஓட விட்டார்.



'மறுவாழ்வு இல்ல'த்தின் கட்டிடம் மிகவும் புராதனமாய் இருந்தது. ஒரு சின்ன காலி மைதானத்தைச் சுற்றிலும் நீளமான நான்கு வராந்தாக்கள். வராந்தாக்களின் ஓரமாய் குழந்தைப் பருவத்தில் இருக்கும் வேப்ப மரங்கள்.

''இந்த இல்லத்துக்கு யார் இன்சார்ஜ்?''

''டாக்டர் தயாளீஸ்வரன்..''

''பெண்கள் இல்லத்துக்கு ஒரு ஆண் டாக்டரா இன்சார்ஜ்? ஆச்சர்யமாயிருக்கே...? அரசாங்கத்துல எப்படி மான்யம் தர ஒத்துக்கிட்டாங்க...?''

''மான்யம் மட்டும் தான் அரசாங்கம். கண்ட்ரோல் பூராவும் ட்ரஸ்ட் போர்டோடது...''

''ட்ரஸ்ட்டி யாரு...?''

''நாகம்மாள்ன்னு ஒரு விடோ லேடி...''

ஜீப் ஒரு மரத்துக்குக் கீழே நின்றது. இன்ஸ்பெக்டர் முருகேஷ் கீழே குதித்து பின் பக்கமாய் போய் ஜீப்பின் கான்வாஸ் கிளாத்தைத் தட்டினார்.

''ம்... இறங்கி... அப்படி ஓரமா நில்லுங்க...''

அந்தப் பெண்கள் சேலைத் தலைப்புகளை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஜீப்பினின்றும் கீழே இறங்க முருகேஷ் முணுமுணுத்தார். ''இப்படி முதலிலேயே போர்த்தியிருந்தா... இங்கே வந்திருக்க வேண்டிய அவசியமில்லை...''

டிரைவர் மட்டும் சிரிக்க... 'ஆபீஸ்' என்று எழுதப்பட்டிருந்த போர்டைப் பார்த்துக் கொண்டே வாசற்படிகள் ஏறி உள்ளே போனார் முருகேஷ்.

கறுப்பாய் உயரமாய் கழுத்தில் ஸ்டெத்தோடு நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த மனிதர் எழுந்தார். வயது நாற்பது இருக்கலாம். மீசையும், கிருதாவும் மைதாமாவைப் பூசிக் கொண்ட மாதிரி நரையோடு தெரிந்தது.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

நாற்காலியைக் காட்டினார் அவர்.

முருகேஷ் உட்கார்ந்து கொண்டே கேட்டார். ''நீங்கள் டாக்டர் தயாளீஸ்வரன். ஈஸ் இட்...?''

''எஸ்...''

''ஐ'யாம் முருகேஷ்... இதுக்கு முந்தி வெள்ளக்கோயில் போலீஸ் ஸ்டேஷன்ல எஸ்.ஐ.யா இருந்தேன். போன வாரந்தான் பிரமோஷன்ல இந்த ஏரியாவுக்கு வந்தேன்.''

''க்ளாட் டு மீட்... யூ...''

த்யாளீஸ்வரன் இன்ஸ்பெக்டரின் கையை வலிய பற்றிக் குலுக்கினார். முருகேஷ் சொன்னார்.

''விபசாரம் பண்ணின நாலு பெண்களை இந்த மறுவாழ்வு இல்லத்தில் சேர்க்கும்படியா மாஜிஸ்ட்ரேட்டோட உத்தரவு...''

''கோர்ட் ஆர்டரை கொண்டு வந்திருக்கீங்களா?''

''இதோ...'',

கையில் வைத்திருந்த பழுப்புக் கவரை நீட்டினார் முருகேஷ். அதை வாங்கிய டாக்டர் கவரைப் பிரித்து கோர்ட் ஆர்டரை உருவினார். கண்களுக்கு கொடுத்துப் படித்தார். பிறகு தலையை உயர்த்தி வெளியே நின்றிருந்த அந்த நான்கு பெண்களையும் கூப்பிட்டார்.

அவர்கள் வெட்கப்படாமல் தயக்கப்படாமல் உள்ளே வந்தார்கள். தயாளீஸ்வரன் கோர்ட் ஆர்டரை பார்த்துக் கொண்டே விசாரித்தார்.

''உம் பேரென்ன...?''

''சரோஜா...''

''ஊரு...''

''சேத்தூரு...''

''இதுக்கு முன்னாடி இங்கே வந்திருக்கியா...?''

''இல்லீங்க...''

''சரி... அப்படி ஓரமா போய் நில்லு...''

இதே ரீதியில் நாலு பேரிடமும் விசாரணையை முடித்துக் கொண்டு இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார் தயாளீஸ்வரன். ''மேடத்துக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டு நாலு பேரையும் இல்லத்துல சேர்த்துக்கிறோம் இன்ஸ்பெக்டர்...''

''டாக்டர்... இந்த ஏரியாவுக்கு நான் புதியவன். விபசார வழக்கில் தண்டனை அடைஞ்சவங்களை சீர்திருத்தறதுக்காக இப்படியொரு மகளிர் இல்லம் இங்கே இருக்கிறது எனக்கு ஆச்சர்யமான ஒரு விஷயம்... இந்த இல்லத்தைப் பத்தி நான் தெரிஞ்சுக்க விரும்பறேன்...''

தயாளீஸ்வரன் புன்னகைத்தார்.

''என்ன தெரிஞ்சுக்க விரும்பறீங்க...?''

''இங்கே மொத்தம் எத்தனை பெண்கள் இருக்காங்க...?''

''அட்... பிரசண்ட்... இருநூத்தி நாற்பத்தேழு பேர்...''

''விபச்சார வழக்குல சம்பந்தப்பட்ட பெண்கள்



மாத்திரம் தான் இருக்காங்களா...?''

''ஆமா...''

''ட்ரஸ்ட்டி போர்டுல மொத்தம் எத்தனை பேர்...?''

''மூணு பேர்...''

''யார்... யார்...?''

''மேடம் நாகம்மாள்... அவரோட தம்பி மிஸ்டர் சங்கமேஸ்வரன்... தேர்ட் பர்சன் நாகம்மாளோட சன் சிவகுமார்...''

''ஒரு சந்தேகம்...!''

''கேளுங்க இன்ஸ்பெக்டர்...''

''பொதுவா பெண்கள் விடுதி, பெண்கள் சம்பந்தப்பட்ட எந்த அமைப்பா இருந்தாலும் அங்கே ஒரு பெண் டாக்டர் தான் இருப்பாங்க... ஆனா, இந்த மகளிர் இல்லத்துல ஒரு ஆண் டாக்டர் இருக்கிறது கொஞ்சம் நெருடலாயிருக்கு...''

''யூ ஆர் கரெக்ட் இன்ஸ்பெக்டர்... ட்ரஸ்டி, ஒரு பெண் டாக்டர் வேணும்ன்னு எவ்வளவோ விளம்பரம் குடுத்துப் பார்த்தார். அட்ராக்ஷன் பே ஸ்கேல் அனௌன்ஸ் பண்ணிப் பார்த்தார். ஒரு பெண் டாக்டராவது இங்கே வர்றதுக்கு அப்ளிகேஷனை அனுப்பணுமே...?''

''என்ன காரணம்?''

''ஒரு அருவருப்புதான் காரணம். இங்கே வர்ற பெண்கள்ல தொண்ணூறு சதவீதம் பேர்க்கு வினேரியல் டிஸீஸ் உண்டு. அதுல பலவகை தொத்து நோய்கள். சில, அவுங்க மேல் பட்ட காற்று நம்ம மேலே பட்டாலே தொற்றிக் கொள்ளக்கூடிய சாத்தியம் அதிகம்... இந்த ரிஸ்க் இருக்கிறதுனாலதான் இங்கே பெண் டாக்டர்கள் வர்றதில்லை...''

''உங்களுக்கு அந்த வினேரியல் டிஸீஸ் பயமில்லையா?''

''இருக்கு... ஆனா நான் ப்ரீகாஷ்னரி ஸ்டெப்ஸ் எடுத்துக்குவேன்... எதிலுமே நாம எச்சரிக்கையா இருந்துட்டா பிரச்னையே இல்லையே...?''

''உங்களுக்கு அஸிஸ்டெண்ட்ஸ் யாருமில்லையா...?''

''யூ மீன் நர்ஸ்...?''

''ஆமா...''

''பதினஞ்சு நாளைக்கு முன்னாடி நர்ஸ் தேவைன்னு ஒரு விளம்பரம் கொடுத்தோம். கோயமுத்தூரிலிருந்து ஒரேயொரு அப்ளிகேஷன்

மட்டுமே வந்தது. அந்தப் பெண்ணுக்கே அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பிச்சுட்டோம்... இன்னும் ரெண்டொரு நாள்ல அந்தப் பொண்ணு வேலைக்கு சேர வர்லாம்...''

''தேங்க்யூ டாக்டர்...'' இன்ஸ்பெக்டர் முருகேஷ், டாக்டர் தயாளீஸ்வரனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தார். டிரைவர் ஜீப்பை நகர்த்தி அருகில் வர, தாவி உட்கார்ந்தார். ஜீப் வேகம் பிடித்து காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியதும் சொன்னார்.

''டிரைவர்! நீ சொன்னது சரிதான். இந்த மகளிர் இல்லத்தில் என்னமோ தப்பு இருக்கு... போலீஸ் டிபார்ட்மெண்ட் இது மேல ஒரு கண்ணை வைக்க வேண்டியது அவசியம்...''

## 3



முகத்தைக் கழுவிக் கொண்டு அத்தை கொடுத்த காப்பியைக் குடித்து விட்டு முன்னறைக்கு நட்சத்திரா வந்து சேர்ந்தபோது கணவன் ரமேஷ் குழந்தை சங்கீதாவோடு கொஞ்சிக் கொண்டிருந்தான்.

''நான் ரெடி... இனிமேலாவது சஸ்பென்ஸை உடைக்கலாமே...?''

''உடைச்சுடறேன்... இன்னிக்கு உனக்கொரு தபால் வந்திருக்கு..''

''எனக்கா...?''

''ஆமா... ரேடியோ மேலே வெச்சிருக்கேன்... எடுத்துப் பாரு...''

நட்சத்திரா சட்டென்று ஆர்வமாகி ரேடியோவை நோக்கிப் போய் அதன் தலைமேல் இருந்த வெள்ளை நிறக் கவரை எடுத்தாள். பார்வை டைப் செய்யப்பட்டிருந்த ஃப்ரம் அட்ரஸின் மேல் தாவியது.

**நிர்வாகி**
**மகளிர் மறுவாழ்வு சங்கம்**
**மம்சாபுரம்.**



**ராஜபாளையம்.**

உடைத்த கவரினின்றும் பரபரவென்று அந்தக் கடிதத்தை உருவினாள். பிரித்தாள். டைப் அடித்த தமிழ் வாசகங்கள் கண்களில் ஒட்டிக் கொண்டன.

**அன்புடையீர்!**

**வணக்கம். எங்கள் மறுவாழ்வு இல்லத்தில் நர்ஸாகப் பணிபுரிய, நீங்கள் விண்ணப்பித்திருந்த விண்ணப்பம் கிடைக்கப் பெற்றோம். தகுதியின் அடிப்படையில் உங்களுக்கே அந்த வேலையைக் கொடுக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது. எனவே, இந்தக் கடிதத்தையே வேலை நியமன உத்தரவாகக் கருதி கடிதம் கிடைத்த மூன்று நாள் அவகாசத்தில் பணியில் சேரும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

**சம்பள விகிதம் கீழ்க்கண்டபடி 1500-50. 2000-75, 2075-150.**

கடிதத்தைப் படித்து விட்டு பளிச்சென்று நிமிர்ந்தாள் நட்சத்திரா.

கணவன், மாமியார், மாமனார் மூன்று பேரும் உதட்டில் அப்பிக் கொண்ட புன்னகையோடு அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

நட்சத்திரா கணவன் பக்கம் திரும்பினாள்.

''எ... எ... என்னங்க... இது...?

''அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்...''

''இது தெரியுதுங்க... ஆனா இந்த வேலைக்கு நான் அப்ளிகேஷன் போட்டதா எனக்கு ஞாபகமேயில்லையே...?''

''அப்ளிகேஷன் நீ போட்டா என்ன? நான் போட்டா என்ன... ரெண்டும் ஒண்ணு தானே...? பதினைஞ்சு நாளைக்கு முன்னாடிதான் ஆபீஸ்ல பேப்பர் பார்த்திட்டிருக்கும்போது இந்த விளம்பரத்தைப் பார்த்தேன். உடனே நானே ஒரு அப்ளிகேஷனை டைப் பண்ணி தபால்ல சேர்த்துட்டேன்...''

நட்சத்திரா கடிதத்தை மடித்து கவர்க்குள் போட்டபடி மௌனம் சாதித்தாள். ரமேஷ் கேட்டான்.

''ஏன் 'உம்'ன்னு ஆயிட்டே...?''

''நீங்க தப்பு பண்ணிட்டீங்க...''

''தப்பா...? என்ன தப்பு...?''

''இந்த 'நர்ஸ் தேவை' விளம்பரத்தை நானும்தான் பார்த்தேன்.

ஆனா அதுக்கு நான் அப்ளை செய்ய விரும்பலை.

நான் மட்டுமில்லை... எந்தப் பொண்ணுமே அந்த வேலைக்கு அப்ளை பண்ண விரும்ப மாட்டாங்க...''

மாமியார்க்காரி குறுக்கே புகுந்தாள்.

''நீ என்னடி சொல்றே?''

''ஆமா... அத்தே... அந்த 'மகளிர் மறுவாழ்வு இல்ல'த்தில் உடம்பை விக்கிற பொம்பளைங்கதான் இருப்பாங்களாம்... ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு வியாதி இருக்குமாம்... அங்கே போய் வேலை பார்க்கிறவங்களுக்கும் ரெண்டே மாசத்துல அந்த வியாதி வந்துடுமாம்...''

''இதையெல்லாம் உனக்கு யாருடி சொன்னா...?''

''ஒரு பத்திரிகையில கட்டுரையா எழுதியிருந்தாங்க... மம்சா புரத்து ஜனங்களும் அந்த மகளிர் மறுவாழ்வு இல்லத்தை அந்த ஊரிலிருந்து கிளர்ச்சி அப்புறப்படுத்தணும்ன்னு பண்ணியிருக்காங்க...''

''யாரோ... என்னமோ... சொல்லிட்டு போகட்டும்... நீ இந்த வேலையில ஜாய்ன் பண்ணிடு... நாளைக்கு நீ ராஜபாளையம் புறப்படறே...'' ரமேஷ் சொல்ல

தலையை தீர்க்கமாய் ஆட்டினாள் நட்சத்திரா.

''வேண்டாங்க... எனக்கு அங்கே போகப் பிடிக்கலை...''

''போகப் பிடிக்கலையா...? இந்த ஊர்ல எவண்டி நர்ஸ் வேலைக்கு எடுத்த எடுப்பிலேயே ஆயிரத்தி ஐநூறு ரூபா சம்பளம் கொடுப்பான்...?''

''வேண்டாங்க... தயவு பண்ணி நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க... நான் இப்போ வேலை பார்க்கிற இடத்திலேயே டாக்டர் அதிக சம்பளம் போட்டுத் தர்றேன்னு சொன்னார்...''

''எவ்வளவு தருவாராம்...?''

''இருநூறு ரூபா...''

''அதாவது மொத்தம் ஐநூறு ரூபா தருவார்... ஐநூறு எங்கே? ஆயிரத்து ஐநூறு எங்கே...?

''போகப் போக போட்டுக் குடுப்பார்ங்க...''

''அந்த டாக்டர் கஞ்சப் பயல்! தர மாட்டான். நீ மம்சா புரத்துக்கு கிளம்பு. மாசம் பொறந்தா ஆயிரத்து ஐநூறு ரூபாயை வள்ளிசா பார்த்துடலாம்...''

''நான் வேணுமின்னா நர்ஸ் காமினியை கூட்டிட்டு வர்றேன்... அந்த மம்சாபுரம் இல்லத்தைப் பத்தி அவ கதைகதையா சொல்லுவா...''

அத்தைக்காரி ஞானாம்பாள் விஸ்வரூபம்



எடுத்தாள். ''நீ எவளையும் கூட்டிட்டு வந்து யார்க்கும் கதை சொல்ல வேண்டாம். பாண்டேஜ் கட்டு கட்டறதுக்கும், காய்ச்சல் மாத்திரை எடுத்துத் தர்றதுக்கும் மாசமானா ஆயிரத்து ஐநூறு ரூபா தர்ற வேலையை சந்தோஷமா ஒத்துக்காமே என்னமோ புராணம் படிச்சிட்டிருக்கா! ரமேஷ் எவ்வளவு கஷ்டப்பட்டு அப்ளிகேஷன் போட்டு இந்த வேலையை உனக்கு வாங்கிக் கொடுத்திருக்கான்...''

நட்சத்திரா தன் மாமனாரின் பக்கம் திரும்பினாள். ''மாமா... நீங்களாவது இவங்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடாதா...? அந்த 'மம்சாபுரம் மறுவாழ்வு மகளிர் இல்ல'த்தைப் பத்தி நீங்க கூட பேப்பர்ல படிச்சிருப்பீங்களே...!''

அவர் இறுகின முகத்தோடு நிமிர்ந்தார். ''அதெல்லாம் எதிர்கட்சிக்காரங்க எழுதற விஷமத்தனமான கட்டுரை. அது பெரும்பாலும் பொய்யாதான் இருக்கும். விபச்சாரம் செய்ற பெண்கள் அந்தத் தொழிலை விட்டுட்டு திருந்தி வாழணும்ங்கிற நல்ல நோக்கத்துக்காக கட்டப்பட்டது அந்த இல்லம். யாரோ என்னமோ சொல்லிட்டுப் போறாங்க... நீ வேலையில ஜாய்ன் பண்ணிக்கம்மா... இந்தியாவில் நீ எங்கே வேலைக்குப் போனாலும் இந்த சம்பளம் உனக்கு கிடைக்காது.''

நட்சத்திரா அரை நிமிஷ நேரத்தை செலவழித்து மூன்று பேரையும் மாறிமாறிப் பார்த்து விட்டு மௌனமாய் தன் அறைக்குள் நுழைய முற்பட்டாள். மாமியார்க்காரி அவளுடைய தோளைப் பற்றி நிறுத்தினாள். ''என்னடி... நாங்க மூணு பேரும் இங்கே குத்துக்கல்லாட்டம் நின்னுட்டிருக்கோம்... நீபாட்டுக்கு வாய்க்குள்ளேயே முனகிட்டுப் போறே... அந்த வேலைக்கு உன்னால போக முடியுமா முடியாதா?''

''எனக்கு இஷ்டமில்லை...''

''ஓ... ஹோ... உனக்கு இஷ்டமில்லையா?'' என்று ஹுங்காரமாய் இழுத்த ஞானாம்பாள் தரையில் தவழ்ந்து கொண்டிருந்த ஒருவயது சங்கீதாவை விருட்டென்று எடுத்து நட்சத்திராவின் இடுப்பில் திணித்தாள்.

''அத்...தே... என்ன இது...?''

''உன்னோட இஷ்டத்தை நீ சொல்லிட்டயில்ல... என்னோட இஷ்டத்தை நான் சொல்ல வேண்டாம்?

உன்னோட கொழந்தையை எடுத்துக்கிட்டு மொதல்ல வாசற்படியைத் தாண்டு...''

''அ...த்...தே...''

''என்னோட இஷ்டத்துக்கு மதிப்புக் கொடுக்காதவங்க... இந்த வீட்ல இருக்கக் கூடாது... ம்... கிளம்பு...''

வீறிட்டு அழுத குழந்தையை தோளில் சாத்திக் கொண்டாள் நட்சத்திரா. கண்களில் குப்பென நீர் திரள - கணவனின் பக்கம் திருப்பினாள்.

''என்னங்க... உங்கம்மா பேசறது உங்களுக்கு நியாயமா படுதா...?'' ரமேஷ் இரும்புத்தனமான முகத்தோடு எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னான். ''எங்கம்மா எது பேசினாலும் அதுல நியாயம் இருக்கும்...''

''வீட்டை விட்டுப் போகச் சொல்ற அளவுக்கு நான் என்ன பண்ணிட்டேன்...?''

''இதோ பார்... நட்சத்திரா... எங்க அம்மாவோட இஷ்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கிறதாயிருந்தா இந்த வீட்ல இருக்கலாம்... இல்லேன்னா உங்கம்மா வீட்டுக்குப் போயிடலாம்...''

''இதுதான் உங்க தீர்மானமான முடிவா...?''

''ஆமா... ஆமா...''

''சரி... நான் போறேன்... உங்களுக்கு நான் எப்ப தேவைப்படறேனோ... அப்ப வந்து என்னைக் கூப்பிடுங்க...''

வாசலை நோக்கி குழந்தையோடு நகர முயன்றவளை தன் குரலில் தடுத்து நிறுத்தினான் ரமேஷ். ''ஒரு நிமிஷம் நின்னு... அவசரப்படாமே... இதையும் கேட்டுட்டுப் போ... நீ குழந்தையோடு இந்த வீட்டு வாசற்படியைத் தாண்டினா... இன்னும் ரெண்டே நாள்ல வக்கீல் மூலமா டைவோர்ஸ் நோட்டீஸ் அனுப்புவேன்...''

'டைவோர்ஸ்' என்ற வார்த்தையைக் கேட்டதும் நட்சத்திரா தளர்ந்தாள். குழந்தையோடு கணவனை நோக்கித் திரும்பினாள். கண்களில் நீர் 'களக்'கென்று உருண்டு இமைகளில் சிதறியது. குரலில் தழுதழுப்பு ஏறிக் கொள்ளக் கேட்டாள்.

''எ...ன்...னங்க... இந்த வார்த்தை உங்க வாயிலிருந்து வரலாமா...?''

''அந்த வார்த்தை தானா வரலை... நீ வரவச்சே!''

''சரிங்க... நான் இப்போ... என்ன பண்ணனும்...?



இந்த வேலைக்குப் போகணும்: அவ்வளவு தானே...?''

''ஆமா...''

''சரி... நான் போறேன்...''

''இந்த வார்த்தையை முன்னாடியே சொல்லியிருந்தா... இவ்வளவு பேச்சு எதுக்கு?'' ஞானாம்பாள் மோவாயை தோளில் இடித்துக் கொண்டாள்.

மாமனார் மறுபடியும் ஈஸி சேர்க்குப் போய் சாய்ந்தார். ரமேஷ் உடனே தன் அறைக்குள் நுழைந்து லுங்கியைக் களைந்து விட்டு பேண்ட்டுக்கும் சர்ட்டுக்கும் மாறினான்.

ஞானாம்பாள் கேட்டாள். ''எங்கடா கிளம்பிட்டே?''

''திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்டுக்குப் போய் ராஜபாளையத்துக்கு டிக்கெட் புக் பண்ணிட்டு வந்துடறேன்...''

''ராஜபாளையம் பஸ் எத்தனை மணிக்கு...?''

''நாளைக்கு காலையில ஏழு மணிக்கு...'' சொல்லிக் கொண்டே வாசலில் நிறுத்தியிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் ரமேஷ்.

நட்சத்திரா குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு, சுவர்க்கு சாய்ந்து உட்கார்ந்தாள். கண்களில் நீர் நிற்காமல் வழிய குழந்தை சங்கீதா அம்மாவின் முகத்தை திகைப்பாய் பார்த்தாள். மருமகள் வேலைக்குப் போக ஒப்புக் கொண்ட சந்தோஷத்தில் ஞானாம்பாள் அவள் அருகே வந்து உட்கார்ந்தாள்.

''அசடு! இப்போ எதுக்காக அழறே...?''

''அத்தே...''

''சொல்லு...''

''குழந்... தையையும்... அ... அ... அவரையும் விட்டுட்டு... நான்... எ... எப்படி... அந்த... மு...ன்...னே... பி...ன்...னே... தெரியாத ஊர்ல...?''

''அந்த ஊருக்குப் போன புதுசுல... ரெண்டு நாளைக்கு அப்படித்தான் இருக்கும்... போகப் போக சரியாகிவிடும்... நீ தங்கிக்க குவார்ட்டர்ஸ் வசதியெல்லாம் இருக்காமே...?''

''அத்தே... அங்கே போய் வேலை பார்க்கவே பயம்மாயிருக்கு... வயிறு பூராவும் ஒரே

திகிலாயிருக்கு...''

''சம்பளத்தை நினைச்சுப்பாரு... திகிலெல்லாம் போயிடும்...''

''குழந்தை... எ... என்னை... விட்டுட்டு...?''

''என்கிட்டே தாராளமா இருந்துக்குவா... தாத்தான்னா அவளுக்கு இன்னமும் ஒட்டுதல். நீ குழந்தையைப் பத்தி கவலைப்படவே வேண்டாம்... தங்கமாட்டம் நான் பார்த்துக்குவேன்...''

நட்சத்திரா மாமியாரின் முகத்தையே பார்த்தாள். 'இந்த அம்மாவை எவ்வளவு தூரத்துக்கு நம்பலாம்? இரண்டு நாட்களுக்கு முன்னால் - ஞாயிற்றுக்கிழமை மத்தியான தூக்கம் குழந்தையின் அழுகையால் கெட்டுப் போனதற்காக இந்த அம்மாள் கத்தின கத்தல். ''சனியன்! குழந்தையையா அவ பெத்து வெச்சிருக்கா... தொண்டையைத் திறந்தாலே கோயமுத்தூர் பூராவும் கேக்கும் போலிருக்கு... இந்த வீட்ல ஒரு மத்தியான நேரமாவது நிம்மதியா தூங்க முடியுதா... சை!'

''என்னடியம்மா... எம் மூஞ்சியையே அப்படி பார்க்கிறே...?''

''ஒண்ணுமில்லே அத்தே...'' என்று சொல்லும் போதே அடி வயிற்றிலிருந்து அந்த விம்மலும் அழுகையும் பீறிட்டது.

# 4



மம்சாபுரம். மகளிர் மறுவாழ்வு சங்கம்.

காலை பத்து மணி. நாகம்மாளின் எதிரே பவ்யமாய் நின்றிருந்தார் டாக்டர் தயாளீஸ்வரன். நாகம்மாளின் தம்பி சங்கமேஸ்வரனும் நாகம்மாளின் மகன் சிவகுமாரும் ஒரு மேஜைக்கு இரண்டு பக்கமாய் அமர்ந்து பைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்கள்.

நாகம்மாளுக்கு ஐம்பது வயதிருக்கும். பாலியஸ்டர் வெள்ளை நிற சேலையில் பவித்திரமான விபூதிப் பொட்டலம் மாதிரி தெரிந்தாள். சற்று கனமான உடம்பு. எந்த வெய்யிங்



மெஷினில் அவளை நிறுத்தி வைத்தாலும் எழுபது கிலோ காட்டும். கழுத்தில் தங்கத்தாலான ருத்திராட்ச மாலையை அணிந்து இடது கையில் தன்னுடைய கணவர் மல்லப்பாவின் வாட்சை அவர் நினைவாகக் கட்டி நேரம் பார்த்தாள்.

சங்கமேஸ்வரனுக்கு நாற்பது வயதிருக்கலாம். அக்காவின் அறுபது சதவீத முக ஜாடை. ஆனால், கறுப்பு. அந்த வயதிலேயே தீர்க்கமான வழுக்கை.

சிவகுமார் இருபத்தேழு வயதில் ஹீரோத்தனமாய் இருந்தான். சிவந்த முகம். ஆட்காட்டி விரல் பருமனில் கெட்டியான கருகரு மீசை. கழுத்தில் ஊசலாடும் ஸ்வஸ்திக் தங்கச் செயின்.

''என்ன டாக்டர்... ஏதோ டெலிகிராம் வந்ததா டெலிபோன்ல சொன்னீங்களே... யார் கொடுத்த டெலிகிராம்? கொண்டாங்க பார்க்கலாம்...'' நாகம்மாள் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி பாலியஸ்டர் சேலையால் பளபளப்பேற்றிக் கொண்டே கேட்டாள்.

டாக்டர் தன் சட்டைப் பையில் தயாராய் வைத்திருந்த டெலிகிராமை எடுத்து நீட்டிக் கொண்டே சொன்னார். ''அந்த கோயமுத்தூர் பொண்ணு நட்சத்திரா இன்னிக்கு சாய்ந்தரத்துக் குள்ளே ட்யூட்டியில ஜாய்ன் பண்ணப் போறதா மெஸேஜ் குடுத்திருக்கா...''

நாகம்மாள் தந்தி வாசகத்தைப் படித்து விட்டு நிமிர்ந்தாள். ''அந்தப் பொண்ணு விவரம் தெரிஞ்சு வர்றாளா... தெரியாமே வர்றாளான்னு எனக்குத் தெரியலை... டாக்டர்! அந்தப் பொண்ணு மிரண்டு போகாமே பார்த்துக்க வேண்டியது உங்க பொறுப்பு.''

''நான் பார்த்துக்கறேன் மேடம்...''

''இந்த மாசத்துல யார்யாரை ரிலீஸ் பண்ணணும்ங்கிற லிஸ்டை ப்ரிபேர் பண்ணிட்டீங்களா...?''

''இன்னும் இல்ல மேடம்...''

''நீங்க மூணு பேரும் உட்கார்ந்து ஃபைனலைஸ் பண்ணுங்க... நான் இல்லத்தை ஒரு தடவை விசிட் பண்ணிட்டு வந்துடறேன்...''

நாகம்மாள் எழுந்தாள்.

டாக்டர் தயாளீஸ்வரன் தயக்கமாய் குறுக்கிட்டார்.

''மேடம்...''

''என்ன டாக்டர்...?''

''அந்த இருபத்தி மூணாம் நெம்பர் ரூமுக்குள்ளே போயிடாதீங்க... அந்த சந்திரிகா ஹிஸ்டீரியா பேஷண்ட் மாதிரி கத்துவா...''

''தெரியும்... நான் பார்த்துக்கிறேன்....''

நாகம்மாள் அறையை விட்டு வெளியே வந்து காலி மைதானத்தில் நடந்து தொலைவில் தெரிந்த அறைகளை நோக்கிப் போனாள்.

அவள் தலை மறைந்ததுமே...

சிவகுமார், டாக்டரைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான்.

''நட்சத்திரா... பேரே ரொம்ப நல்லாயிருக்கு...'' சங்கமேஸ்வரன் சிரித்தார். ''ஆள் எப்படியிருப்பான்னு தெரியலையே...?''

''கோயமுத்தூர்க்காரியாச்சே... அமர்க்களமாகத் தான் இருப்பா...''

''அதெப்படி... அவ்வளவு கரெக்டா சொல்றே?''

''அந்த சிறுவாணி தண்ணியும், க்ளைமேட்டுமே அங்கேயிருக்கிற பெண்களுக்கு அழகு சாதனங்கள் மாதிரி... மாமா...''

''நட்சத்திராவுக்கு அப்ளிகேஷன்ல என்ன வயது போட்டிருக்கு டாக்டர்?''

''இருபத்தி மூணு...''

''கல்யாணமானவளா....?''

''ஆமா... ஒரு வயசுல ஒரு குழந்தையும் இருக்கு...''

''குலை தள்ளிய வாழை!''

''பாதகமில்லை... அவ... மொதல்ல மசியறாளான்னு பார்க்கணும்...!''

## 5



**கா**லை ஏழு மணி. திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்ட். பஸ்ஸில் ஜன்னலோரமாய் உட்கார்ந்து கம்பியில் முகம் பதித்து வெளியே நின்றிருந்த கணவனையும் கணவனின் கையிலிருந்த குழந்தை சங்கீதாவையும் கண்களில் நிறைந்து போன நீரோடு பார்த்துக் கொண்டிருந்தாள் நட்சத்திரா. குழந்தை,



ரமேஷின் தோளில் சிணுங்கிக் கொண்டேயிருந்தது.

''நட்சத்திரா...''

''ம்...''

''உங்கம்மா... பஸ் ஸ்டாண்ட்டுக்கு வருவாங்கன்னு சொன்னே...?''

''முடியலை போலிருக்கு... நேத்தைக்கு ராத்திரி நான் பார்க்கப் போயிருந்தபோதே இருமிட்டிருந்தாங்க...''

''டாக்டர் தாமோதர் என்ன சொன்னார்?''

''ஒண்ணும் சொல்லலை... 'விஷ் யூ ஆல் த பெஸ்ட்'ன்னு சொல்லி விஷ் பண்ணினார்...'' சொல்லியவள், கண்களில் பளிச்சிட்ட நீரை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள்.

''நீ தைரியமா புறப்பட்டுப் போ நட்சத்திரா... நான் அடுத்த ஞாயிற்றுக் கிழமை அங்கே வர்றேன்...''

''வர்றப்ப குழந்தையையும் எடுத்துட்டு வாங்க...''

''முயற்சி பண்றேன்...'' என்றவன் குரலைத் தாழ்த்திக் கொண்டு ''அம்மா உன்கிட்டே ஒரு விஷயத்தை சொல்லச் சொன்னாங்க...'' என்றான்.

''என்ன விஷயம்...?''

''வேலையில ஜாய்ன் பண்ணினதுமே ரெண்டு நாள் கழிச்சு நிர்வாகத்துக்கிட்டே ஆயிரமோ ரெண்டாயிரமோ கேக்கச் சொன்னாங்க...''

அந்தத் துக்கத்திலும் எரிச்சல் வந்தது நட்சத்திராவுக்கு. எரிச்சலை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் பதில் சொன்னாள்.

''நிர்வாகத்தில இருக்கிற ஆட்கள் யாரு... எப்படிப்பட்டவங்க என்கிற விவரம் தெரியாமே... போனதுமே அட்வான்ஸ் கேக்கிறது சரியில்லீங்க...''

''போனதுமே கேக்காதே... வாரம் பத்து நாள் கழிச்சுக் கேளு... தந்தா தர்றாங்க... தராட்டிப் போறாங்க...'' சொல்லியபடியே குழந்தையை கீழே இறக்கி விட்டு சர்ட் பாக்கெட்டில் இருந்த சிகரெட் ஒன்றை எடுத்து வாயில் பொருத்திக் கொண்டான்.

பத்தடி தூரத்தில் நின்று பீடி குடித்துக் கொண்டிருந்த ஒரு ஆட்டோ டிரைவரிடம் போய் அவருடைய எச்சில் பீடியை வாங்கி தன்னுடைய சிகரெட் நுனியை சிவப்பாக்கிக் கொண்டு வந்தான்.

அந்த அரை நிமிஷ பிரிவைக் கூட தாங்கிக் கொள்ள முடியாத குழந்தை சங்கீதா தன் வாயை வஞ்சகமில்லாமல் திறந்து அழ - நட்சத்திரா கீழே இறங்கி வந்து குழந்தையை அள்ளிக் கொண்டாள்.

"நீ ஏன் இறங்கி வந்தே... போய் உட்கார்..."

"பரவாயில்லை... இன்னும் டிரைவர் வரலை... குழந்தையை நல்லா பார்த்துக்குங்க... ராத்திரி நேரத்துல அவளை உங்க பக்கத்தில எடுத்துப் போட்டுக்குங்க..."

"ம்... ம்..."

எங்கோ பார்த்துக் கொண்டு புகையை ஊதினான் ரமேஷ்.

"அவளுக்கு டின் பால் ஒத்துக்காது. பசும்பால் தான் வேணும்... டின் பால் புகட்டினா அவளுக்கு வயிற்றோட்டம் வந்துடும்..."

"ம்... ம்..."

"அப்புறம்... குடிக்கிற தண்ணியைக் கொதிக்க வைச்சுத்தான்... தரணும்..."

எரிச்சலாய் அவளைப் பார்த்தான் ரமேஷ். "இதோ பார் நட்சத்திரா! எங்கம்மாவும் குழந்தை பெத்திருக்கா... வளர்த்திருக்கா... சும்மா கிளிப்பிள்ளைக்கு சொல்லித் தர்ற மாதிரி சொல்லிக்கிட்டிருக்காதே... நா ஒண்ணு சொல்லட்டுமா? எங்கம்மா உன்னைக் காட்டிலும் சங்கீதாவை நல்லாவே பார்த்துக்குவா... நீ குழந்தையைக் குடுத்துட்டு வண்டியில் போய் உட்கார். கண்டக்டரும் டிரைவரும் பஸ்ஸுக்கு வந்துட்டாங்க..."

கணவனிடம் குழந்தையை நீட்டினாள் நட்சத்திரா. குழந்தை, ரமேஷிடம் போகப் பிடிக்காமல் நட்சத்திராவின் கழுத்தைக் கட்டிக் கொண்டது.

"ம்... மா... ஆ..."

"அப்பா கிட்டே போம்மா..."

'மாட்டேன்' என்பது போல குழந்தை தலையாட்டியது.

"என் கண்ணல்ல... போம்மா... அம்மா ஊருக்குப் போய்ட்டு பொம்ம வாங்கிட்டு வருவேனாம்..."

கையிலிருந்த சிகரெட்டை உதட்டில் இடுக்கிக் கொண்டு "குழந்தையைக் கொஞ்சிட்டிருக்க இது நேரமில்லை நட்சத்திரா. இப்படிக்... குடு..." ஒரு பூவை செடியிலிருந்து மூர்க்கத்தனமாய் பிய்த்து எடுக்கிற மாதிரி சங்கீதாவை நட்சத்திராவிடமிருந்து பிடுங்கினான் ரமேஷ்.

குழந்தை வீறிட்டு மறுபடியும் நட்சத்திராவிடமே தாவியது.

"இந்த எழவுக்குத்தான் உன்னைக் கீழே இறங்க



வேண்டாம்ன்னு சொன்னேன். நீ கேக்கலை... இப்பப் பாரு பிசின் மாதிரி ஒட்டிக்கிட்டா..."

பஸ் டிரைவர் மறுபடியும் ஒரு ஹார்ன் கொடுக்க நட்சத்திரா தவிப்போடு குழந்தையை வலுக்கட்டாயமாய் ரமேஷிடம் திணித்து விட்டு பஸ்ஸில் ஏறினாள்.

சீட்டுக்கு வந்து உட்கார்ந்தபோது பஸ் நகர்ந்தது. குழந்தை சங்கீதா ரமேஷிடம் திமிறிக் கொண்டிருந்தாள். பஸ்ஸின் பக்கம் கையைக் காட்டி வீறிட்டுக் கொண்டிருந்தாள்.

"நான் வர்றேங்க..."

"ம்... ம்..."

சிகரெட் வாயோடு தலையாட்டினான் ரமேஷ்.

பஸ் கொஞ்சம் வேகம் பிடித்து பஸ் ஸ்டாண்ட்டை கடந்தது. கண்களை மறைத்த கண்ணீரை அவசர அவசரமாய் துடைத்துக் கொண்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். ரமேஷ் குழந்தையின் கன்னத்தில் 'பட்பட்'டென்று அறைந்து கொண்டிருந்தான். குழந்தை வலி தாங்காமல் துடிப்பது நட்சத்திராவின் வயிற்றில் அக்னியை வார்த்தது.



# 6

சுத்தமாய் ஒன்பது மணி நேர பயணம்.

மதுரை தென்காசி ரோட்டில் - ஸ்ரீவில்லிப்புத்தூர்க்கும் ராஜபாளையத்திற்கும் நடுவில் - ஹைவேஸ் ரோட்டின் ஓரமாய் பஸ் நின்றது. கண்டக்டர் குரல் கொடுத்தார்.

"மம்சா புரத்துக்கு இங்கதாம்மா இறங்கணும். இங்கிருந்து உள்ளே ஒரு கிலோ மீட்டர் தூரம் நடக்கணும்..."

சூட்கேஸோடு இறங்கிக் கொண்டாள்.

பஸ் நகர்ந்து மறைந்து போனதும் சுற்றும் முற்றும் பார்த்தாள் நட்சத்திரா. ரோட்டின் இரண்டு பக்கமும் பொட்டல் வெளி. அதன் நடுவே குச்சி குச்சியாய் நீட்டிக் கொண்டிருக்கும் பனை மரங்கள். பனை மரங்களுக்கப்பால் ராபின் ப்ளு நீலத்தில் மலைத்

தொடர்கள். ரோட்டின் இடது பக்கமாய் வெட்டிக் கொண்டு போன மண் ரோட்டின் ஆரம்பத்தில் மம்சாபுரம் 1 கி.மீ., என்ற போர்டு தெரிந்தது.

அதை நோக்கி மெல்ல நடந்தாள் நட்சத்திரா.

ஒன்பது மணி நேர பயணம் அவளுடைய உடம்பை புண்ணாக்கியிருந்தது. மதுரையில் ஒரு ஹோட்டலில் சாப்பிட்ட சாப்பாடு நெஞ்சைக் கரித்தது. அந்த உடல் உபாதைகளையெல்லாம் மீறி வயிற்றில் ஒரு பயம் திம்மென்று உட்கார்ந்திருந்தது.

மண் ரோட்டில் திரும்பினாள்.

காற்று பலமாய் வீசி அவள் முன்னுச்சி முடியைப் பறக்க வைத்தது. கை மாற்றி சூட்கேஸை சுமந்து ஒரு நூறு மீட்டர் நடந்திருந்தபோது சொற்பமாய் வீடுகளின் ஓட்டுக் கூரைகளும் வெள்ளைச் சுவர்களும் கண்ணில் பட்டன.

எருமை மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சில சிறுவர்கள் கோவணத்தோடு நின்று இவளையே வெறித்துப் பார்க்க, பின் பக்கம் கார் ஹார்ன் சத்தம் கேட்டது. நட்சத்திரா திரும்பிப் பார்த்தாள்.

பாசி நிறத்தில் அந்த டால்பின் கார் தத்தி தத்தி வந்து கொண்டிருந்தது. கார்க்குப் பின்னால் கெட்டியாய் செம்மண் புழுதி. சேலைத் தலைப்பால் முகத்தைப் பொத்திக் கொண்டு ரோட்டோரமாய் ஒதுங்கி நின்றாள் நட்சத்திரா. தத்தி தத்தி வந்த கார் அவளருகே வந்ததும் நின்றது. டிரைவிங் சீட்டிலிருந்த அந்த இளைஞன் எட்டிப் பார்த்தான்.

குரல் கொடுத்தான்.

''எக்ஸ்க்யூஸ்மீ... நீங்க மிஸஸ் நட்சத்திராவா...?''

அவள் தலையாட்டினாள்.

''மகளிர் மறுவாழ்வு இல்லத்துக்குத்தானே போறீங்க?''

''ஆமா...''

அவன் ஒரு புன்சிரிப்போடு காரை விட்டு இறங்கி வந்தான். நட்சத்திராவை நெருங்கியதும் சொன்னான்.

''வெல்கம் டூ... மம்சாபுரம்...''

''நீங்க...?''



''எம்பேர் சிவகுமார்... மகளிர் மறுவாழ்வு இல்ல ட்ரஸ்ட்டுக்கு என்னோட மதர்தான் சேர்மன். நீங்க கொடுத்த தந்தியை காலையில் பார்த்தேன். இப்பத்தான் பஸ்ஸிலிருந்து இறங்கி வர்றீங்களா?''

''ஆ... ஆமா...''

''கெட் இன் த கார்... நானும் இல்லத்துக்குத்தான் போயிட்டிருக்கேன். அம்மாவும் அங்கே தான் இருக்காங்க...''

நட்சத்திரா தயங்கினாள்.

''ப்ளீஸ்... வாங்க... டோண்ட் ஹெசிடேட்...'' சொல்லிக் கொண்டே அவள் கையிலிருந்த சூட்கேஸை வாங்கி காரின் பின் சீட்டில் கொண்டு போய் வைத்தான். வேறு வழியில்லாமல் நட்சத்திரா அவனோடு நடந்து காருக்கு வந்தாள்.

இருவரும் காருக்குள் நுழைந்ததும் புறப்பட்டது.

''கோயமுத்தூரிலிருந்து காலையில எத்தனை மணிக்கு புறப்பட்டீங்க?''

''ஏழு மணி...''

''துணைக்கு ஹஸ்பெண்ட் வரலையா...?''

''வரலை...''

''இந்த வேலைக்கு மொத்தம் முந்நூத்தி சொச்ச அப்ளிகேஷன்ஸ் வந்தது. நீங்க நர்ஸ் ட்ரெயினிங் கோர்ஸ்ல வாங்கியிருந்த மார்க்ஸைப் பார்த்ததும் அம்மா உங்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பச் சொல்லிட்டாங்க...''

கார் பொட்டல் வெளிக்கு மத்தியில் தாறுமாறாய் வளைந்து போன மண் ரோட்டில் குலுங்கி குலுங்கி போய்க் கொண்டிருந்தது.

தொலைவில் நீளமாய்

ஒரு வெள்ளையடித்த சுவர் தெரிய...

''அதான் நம்ம இல்லம்'' என்றான் சிவகுமார்.

ஆர்வமாய் காரின் முன்புறக் கண்ணாடி வழியாகக் குனிந்து பார்க்கும் நட்சத்திராவை பார்வையால் கழுவினான். 'கல்யாணமாகி ஒரு குழந்தையைப் பெற்றவளானாலும் அம்சமாய்த்தான் இருக்கிறாள். மாமா சங்கமேஸ்வரனும், டாக்டரும் பார்த்தால் அசந்து போய் விடுவார்கள்.'

கார் இல்லத்தை நெருங்கியது.

# 7



நாகம்மாள் முன்னால் பவ்யமாய் நின்று வணக்கம் சொன்னாள் நட்சத்திரா. அவளுடைய முதுக்குப் பின்னால் சிவகுமார், சங்கமேஸ்வரன், டாக்டர்.

''உட்காரம்மா...'' நாகம்மாள் சொல்ல நட்சத்திரா உட்கார்ந்தாள். ''நீ இங்கே வேலை பார்க்க வந்தது எனக்கு ரொம்பவும் சந்தோஷம்... நீ இங்கே எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் ஃப்ரீயா இருக்கலாம்...''

''நான் தங்கிக்க...?''

''விடுதியோட கடைசியில குவார்ட்டர்ஸ் இருக்கு... நீ உன்னோட கணவன் குழந்தையோடு கூட வந்து தங்கிக்கலாம்...''

முகம் மலர்ந்தாள் நட்சத்திரா. 'நாளைக்கே அவருடைய ஆபீஸுக்கு போன் செய்து இது பற்றிக் கேட்க வேண்டும்...'

''என்னம்மா யோசிக்கறே...?''

''நத்திங் மேடம்...''

''சரி... நீ ரொம்பவும் டயர்ட்டா வந்திருப்பே... போய்க் குளி... மெஸ்ல சாப்பிட்டு நல்லா படுத்துத் தூங்கி ரெஸ்ட் எடு... நாளைக்குக் காலையில டாக்டர் உன்னோட வேலைகள் என்னாங்கிறதை அட்டவணை போட்டுத் தருவார்...'' சொன்ன நாகம்மாள் மகனிடம் திரும்பினாள். ''சிவகுமார்... நட்சத்திராவுக்கு குவார்ட்டர்ஸைக் காட்டிட்டு வா...''

அவன் தலையாட்டி ''வாங்க... நட்சத்திரா...'' என்றான். இருவரும் வெளியே வந்து. அந்த சாயந்தார நேர வெய்யிலில் நனைந்து கொண்டே காலித் திடலில் நடந்தார்கள். அறை ஜன்னல்களில் ஏராளமான பெண் முகங்கள் எட்டிப் பார்த்து சிரித்தன. முதுகுக்குப் பின்னால் குரல்கள் மிதந்து வந்தன.

''சரோ... யாரது...?''

''நம்மளை மாதிரிதான்... புதுசா வந்திருக்கு போலிருக்கு...''

''மெட்ராஸ் போலிருக்கு... அதான் இவ்வளவு



ஸ்டைலா இருக்கா...''

''உடம்பைப் பாரு... 'திமுக்'ன்னு கெழங்காட்டம் இருக்கு...''

நட்சத்திராவின் காதில் வார்த்தைகள் சரமாரியாய் வந்து விழுந்து கொண்டிருக்க கொஞ்சம் இருட்டடித்த முகத்தோடு அருகே நடந்து வந்த சிவகுமாரை ஏறிட்டாள். அவன் புன்னகைத்தான்.

''அவங்களோட அகராதிப்படி இந்த கேம்பஸுக்குள்ளே எந்த பொண்ணு நுழைஞ்சாலும் அவ உடம்பை விக்கிற பொண்ணுன்னு தான் அர்த்தம்...''

''இந்த இல்லத்துல எத்தனை பொண்ணுக இருப்பாங்க?''

''இருநூத்தி சொச்சம் பேர்...''

''எல்லாருமே 'அதே மாதிரி'யான பெண்கள் தானா...?''

''ஆமா...''

''இது ரொம்பவும் ஆச்சர்யமான விஷயம். தமிழ்நாட்ல இந்த மாதிரியான இல்லம் வேற எங்கேயாவது இருக்கா...?''

''வட நாட்டில் பூனாவுக்குப் பக்கத்துல 'தாலேகாப்' என்கிற ஊர்ல இது மாதிரியான இல்லம் ஒண்ணு இருக்கு...''

காலி திடலைக் கடந்து விடுதிக்கு பின் பக்கமாய் வந்தார்கள். சீமை ஓடுகளால் வேயப்பட்ட அந்த சின்னஞ்சிறு கட்டிடம் செம்பருத்திப்பூச் செடிகளால் சூழப்பட்டிருந்தது. நான்கைந்து பப்பாளி மரங்கள். ஒரு பவழ மல்லிகைச் செடி நேற்று உதிர்ந்த பூக்களோடு தெரிந்தது. நட்சத்திராவுக்கு அந்த இடம் ரம்மியமாய் இருப்பதாய் மனசுக்குப் பட்டது.

''டாக்டர் எங்கே தங்கிக்குவார்?''

''அவர்க்கு அடுத்த ஸைட்ல இதே மாதிரி குவார்ட்டர்ஸ் இருக்கு... இதை விட கொஞ்சம் பெரிய சைஸ். 'டபுள் பெட்ரூம்...' 'டபுள் பெட்ரூம்' என்று சிவகுமார் அழுத்திச் சொன்னதை நட்சத்திரா கவனிக்கவில்லை.

குவார்ட்டர்ஸின் வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள். இருபதடிக்கு பத்தடியில் ஒரு சின்ன ஹால்... நீல நிற டிஸ்டெம்பர் பூசப்பட்ட சுவர்கள். கொசுவலையோடு கட்டில் போடப்பட்டிருந்த சின்ன பெட்ரூம். எதிரே பாத்ரூம்.

டாய்லெட். உள்ளே கிச்சன். ஒரு அளவான குடும்பம் அழகாக வாசம் புரியலாம்.

''உங்களுக்கு ஒரே குழந்தை தானா?''

''ஆமா...''

''ஆணா...?''

''இல்லே பெண்...''

''உங்க கணவர்க்கு என்ன வேலை...?''

''ஒரு பிரைவேட் கம்பெனியில் க்ளார்க்கா இருக்கார்...''

''நீங்க ஃபேமிலியோடு வந்து இங்கே தங்கிக்க முடியாதா?''

''இங்கே இவ்வளவு வசதி இருக்கும்ன்னு தெரிஞ்சிருந்தா... அவர்கிட்ட பேசிப் பார்த்திருப்பேன்...''

''அவர் கோயமுத்தூர்ல வேலை பார்க்கிறவர்... இங்கே வந்து எப்படி இருப்பார்...?''

''அவர் வேலை செய்யற கம்பெனிக்கு தமிழ்நாடு பூராவும் நிறைய பிராஞ்ச்சஸ் இருக்கு... நிச்சயமா மதுரையிலேயும் ஒரு பிராஞ்ச் இருக்கும்... அங்கே ட்ரான்ஸ்பர் வாங்கிக்கலாமே?''

''முயற்சி பண்ணிப் பாருங்க...''

நட்சத்திரா டாய்லெட்டையும், பாத்ரூமையும் எட்டிப் பார்த்துவிட்டு வந்தாள். ''கோயமுத்தூர்ல இந்த குவார்ட்டர்ஸுக்கு ஆயிரம் ரூபா வாடகை வாங்கிடுவாங்க...''

சிவகுமார் சிரித்து விட்டு சொன்னான். ''நீங்க குளிங்க... கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க... ஏழு மணிக்கு ஒரு பொண்ணு வந்து உங்களை மெஸ்ஸுக்கு கூட்டிட்டு போவா... சாப்பிட்டுத் தூங்குங்க... நாளைக்குப் பார்ப்போம்...''

''உங்களுக்கு வீடு?''

''ராஜபாளையத்துல... இங்கிருந்து அஞ்சு கிலோ மீட்டர்...''

''மேடம்... ஐ... மீன்... உங்க மதர்... டெய்லி இங்கே வருவாங்களா?''

''நாங்க எல்லோருமே வருவோம்...'' புன்னகை மாறாத முகத்தோடு அவளிடம் பேசி விட்டு குவார்ட்டர்ஸை விட்டு வெளியே போனான்.

நட்சத்திராவின் மனசில் கொஞ்சம் தைரியம் வந்திருந்தது. 'எல்லோருமே இனிமையாய் தெரிகிறார்கள். நான் அநாவசியமாய் பயப்பட்டிருக்க



வேண்டாம். நாளைக்கு டாக்டர் தரப்போகிற வேலைகளைப் பார்த்தால் கொஞ்ச நஞ்ச சந்தேகமும் தீர்ந்துவிடும்'.

வாசல் கதவைச் சாத்தின நட்சத்திரா தான் கொண்டு வந்திருந்த சூட்கேஸைத் திறந்து மாற்று உடைகளை எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்குள் நுழைந்தாள்.

குழாயைத் திறந்து விட்டு அதனடியில் உட்கார்ந்து நிதானமாய் அரை மணி நேரம் அலுப்பு போகக் குளித்தாள். உடம்பும் மனசும் லேசாகி காற்றில் மிதப்பது போல் இருந்தது நட்சத்திராவுக்கு.

தலையின் ஈரம் போகத் துடைத்து மாற்று சேலைக்குள் நுழைந்து முன் வராந்தாவுக்கு வந்தாள். அங்கிருந்து பார்க்கும்போது காலித் திடலில் கால் பாகம் தெரிந்தது. பெண்கள் தொட்டியுடன் இணைக்கப்பட்ட குழாய்களுக்கு கீழே நின்று முகம் கழுவிக் கொண்டிருந்தார்கள். சிரிப்பும், கூச்சலும் காற்றில் கலந்திருந்தது.

யார்க்குமே எந்த அவமான உணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ காலேஜ் ஹாஸ்டலில் மாணவிகள் கொட்டமடிக்கிற மாதிரியான தினுசில் சிரித்து கொண்டும் பேசிக் கொண்டும்!

''அம்மா!''

குரல் கேட்டுத் திரும்பினாள்.

பக்கெட்டும் கையுமாய் அந்தக் கிழவி நின்றிருந்தாள்.

''என்ன... வேணும்?''

''வீட்டைச் சுத்தம் பண்ணச் சொன்னார் டாக்டர்...''

''சரி உள்ளே... போ...''

வழி விட்டு நின்றாள் நட்சத்திரா.

அந்தக் கிழவி அவளையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு உள்ளே போனாள்.

நட்சத்திரா அங்கிருந்த திட்டின் மேல் உட்கார்ந்து கொண்டாள். உள்ளே போன கிழவி ஹாலைப் பெருக்கும் சத்தமும் பாத்ரூமைக் கழுவி விடும் சத்தமும் கேட்டது.

ஒரு பத்து நிமிஷம் கழித்து அந்தக் கிழவி திரும்பி வந்தாள். நட்சத்திராவின் அருகே வந்து தயக்கமாய் நின்றாள். ''அம்மாவுக்கு எந்த ஊரு...?''

''கோயமுத்தூர்...''
''நர்ஸ் வேலைக்கு வந்தீங்களா?''
''ஆமா...'' என்ற நட்சத்திரா... ''நீ இங்கே எத்தனை
நாளா வேலைப் பார்க்கிறே?'' என்று கேட்டாள்.
''ஏழெட்டு வருஷம் இருக்கும்மா...''
''இதுக்கு முன்னாடி இங்கே நர்ஸ் வேலைக்கு
யாராவது வந்திருக்காங்களா?''
''நிறைய பேர் வந்திருக்காங்கம்மா... ஆனா...''
''ஆனா... என்ன ஆனா...?'' நெற்றியைச்
சுருக்கினாள் நட்சத்திரா.
''யாருமே வாரம் பத்து நாளைக்கு மேலே இருக்க
மாட்டாங்க. வேலை வேண்டாம்ன்னு சொல்லிட்டுப்
போயிடுவாங்க...''
''ஏன் அப்படி...?''
''அதை நான் சொல்லக் கூடாதம்மா... ரெண்டு
நாள்ல நீங்களே தெரிஞ்சுக்குவீங்க...!'' சொன்ன
கிழவி விறுவிறுவென்று வாசற்படி இறங்கி
நடந்தாள்.

# 8



மறுநாள் காலை எட்டு
மணி. பிரார்த்தனை
கூட்டத்தில் கலந்து
கொண்டு விட்டு மெஸ்
ஸிற்கு போய் டிபனை
முடித்துக் கொண்டு
டாக்டர் தயாளீஸ்வரனின்
அறைக்கு திரும்பியிருந்தாள் நட்சத்திரா.
''குடமார்னிங் டாக்டர்...''
''வாம்மா... உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்...
நீயெல்லாம் பிரார்த்தனைக் கூட்டத்துல
கலந்துக்கணும்ங்கிற அவசியம் கிடையாது... நேரா
மெஸ்ஸுக்குப் போய் சாப்டுட்டு இங்கே
வந்துடலாம்... எட்டு மணிக்கெல்லாம் மெடிக்கல்
செக்கப் ஆரம்பமாயிடும்...''
''டெய்லி மெடிக்கல் செக்கப் இருக்கா டாக்டர்...?''
''ஆமாம்மா... இந்த எய்ட்ஸ் பயம் வந்ததிலிருந்து
விபச்சாரம் பண்ணிய பெண்களை தினசரி 'செக்கப்'
பண்ணியாகணும்ன்னு கவர்ன்மெண்ட் ஆர்டரே



இருக்கு... அதுவுமில்லாம இங்கே இருக்கிற ஐம்பது
சதவீத பெண்களுக்கு வினேரியல் டிஸீஸ் இருக்கு...''
நட்சத்திராவின் அடி வயிறு லேசாய் கலங்க
ஆரம்பித்தது.
டாக்டர் தொடர்ந்தார். ''டாக்டரும் நர்ஸும்
பேஷண்ட்களை அருவருப்பாகப் பார்க்கக் கூடாது...
அனுதாபத்தோடுதான் பார்க்கணும்...''
''தெரியும் டாக்டர்...''
''குட்... நான் இப்போ சொல்லப் போறதை நீ
கவனிக்கணும்... இன்னும் கொஞ்ச நேரத்துல
மெடிக்கல் செக்கப்புக்காக எல்லா பெண்களுமே க்யூ
வரிசையில் வந்து நிப்பாங்க... ஒவ்வொருத்தரா
உள்ளே வருவாங்க... சிலர்க்கு இஞ்செக்ஷன் போட
வேண்டி வரும். சில பேர்க்கு தொடைப் பகுதியில்
பால்வினைப் புண்கள் இருக்கும். அதை தொடைச்சு
சுத்தம் பண்ணி மருந்து போடணும்... நீ ஒரு நர்ஸ்.
உனக்குத் தெரியாதது ஒண்ணுமில்லை.. இந்தப்
பெண்கள்ல பல போர்க்கு கண்டேஜியஸ் டிஸீஸ்.
கொஞ்சம் ஏமாந்தாலும் தொத்திக்கும். ஸோ... நீ
ஸ்டெரிலைஸ் பண்ணப்பட்ட கையுறைகளைத்
தான் உபயோகிக்கணும்... மெடிக்கல் செக்கப்
முடிஞ்சதுமே உடனடியாக குவார்ட்டர்ஸுக்குப்
போய் மெடிசினல் சோப்பைப் போட்டுக்
குளிச்சிடணும்...''
டாக்டர் சொல்லும்போது நட்சத்திராவுக்கு அடி
வயிற்றைக் கலக்கியது. நெற்றியில் வியர்வை அரும்பு
கோர்த்தது. டாக்டர் தயாளீஸ்வரன் அவளுடைய
பயத்தை பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே
போனார்.
''இது கொஞ்சம் ரிஸ்க்கான வேலை தான்... ஆனா
ஜாக்கிரதையாய் இருந்தா எந்த ஆபத்தும் இல்லை...
கொஞ்சம் ஏமாந்தாலும்...''
வெளியே கூச்சல் கேட்டது.
''எல்லோரும் வந்துட்டாங்க போலிருக்கே...''
டாக்டர் சொல்ல
நட்சத்திரா வெளியே எட்டிப் பார்த்தாள்.
காலி திடலில் 'ப' வடிவில் பெண்கள்
நின்றிருந்தார்கள். தொடைகளை சொறிந்து
கொண்டும் தலைகளைக் கீறிக் கொண்டும்
தெரிந்தார்கள்.
''ஒவ்வொருத்தர் பேரையும் சொல்றேன்... நீ போய்

கதவு கிட்டே நின்று கூப்பிடணும்... மொதல்ல..
அமுதா...''

நட்சத்திரா, கதவருகே வந்து நின்று 'அமுதா' என்று குரல் கொடுக்க வரிசையில் முதலாவதாய் நின்றிருந்த பெண் தொடையைச் சொறிந்து கொண்டே உள்ளே வந்தாள். டாக்டரைப் பார்த்து சிநேக பாவத்தோடு இளித்தாள்.

அவர் கேட்டார்.

''என்ன சொல்லுது புண்ணு...? ஆறிட்டு வருதா...?''

''எங்கே டாக்டர் ஆறுது...? ராத்திரி பூராவும் சொறிஞ்சி சொறிஞ்சி ரத்தம் வடிய ஆரம்பிச்சுடுச்சு... பார்க்கறீங்களா...?

சேலையையும் பாவாடையையும் உயர்த்த முயன்றாள் அந்த அமுதா. டாக்டர் பதட்டமாய் கைகளை ஆட்டினார். ''வேண்டாம்... வேண்டாம்... பக்கத்து ரூமுக்கு போய் மேஜை மேலே ஏறி படு... இந்த நர்ஸ் மருந்து போட்டு விடுவாங்க.

''புதுசா வந்திருக்கா...? இது எத்தினி நாளைக்கோ?'' அவள் சிரித்துக் கொண்டே காலை அகட்டியபடி நடந்து போய் பக்கத்து அறைக்குள் நுழைந்து டேபிளின் மேல் ஏறிப்படுத்தாள். அவள் நட்சத்திராவின் அருகே வந்தபோது கொத்தாய் ஒரு துர்நாற்றம் வீசியது.

''என்னம்மா... அப்படியே நின்னுட்டே? இந்தப் பொண்ணுக்கு ரெண்டு தொடையிலேயும் கட்டி கட்டியாய் புண். போரிக் மருந்து போடறதுக்கு முன்னாடி டெட்டால் தண்ணியாலே பஞ்சைத் தொட்டு புண்ணைக் கழுவணும்... டேபிள் மேலே டெட்டால் தண்ணி பஞ்சு போரிக்பௌடர் எல்லாமே இருக்கு...

நட்சத்திரா தயக்கமாய் அந்த அறைக்குள் நுழைந்தாள். நீளமான ஒரு மர மேஜையின் மேல் அந்தப் பெண் அமுதா பாவாடையையும், சேலையையும் மேலே இழுத்து விட்டுக் கொண்டு படுத்திருந்தாள். தொடை பூராவும் கன்னங்கரேலென்று சின்னச் சின்ன கட்டிகள். கட்டிகள் உடைந்து நீளம் நீளமாய் ரத்தக் கோடுகள். நடுநடுவே சில கட்டிகள் சீழ் பிடித்துப் போய் வயிற்றைக் குமட்டியது நட்சத்திராவுக்கு.

கையுறைகளை மாட்டிக் கொண்டு மேஜையை



நெருங்கினாள். அதுவரையிலும் அவளுடைய மூக்கு சுவாசித்திராத அந்த துர்நாற்றம் குபீரென்னு அடித்தது.

கர்ச்சீப்பால் மூக்கை பொத்திக் கொண்டு கையளவு பஞ்சை பிய்த்துக் கொண்டு டெட்டால் நீரில் நனைத்துக் கொண்டு அவளருகே வந்தாள். அவள் கண்களை மூடிக் கொண்டு முனகினாள்.

''நல்லா சுத்தம் பண்ணி மருந்து போடு...''

புரட்டிக் கொண்டு வந்த வயிற்றை சமாதானப்படுத்தி அந்தப் பெண்ணின் தொடைப் புண்களை சுத்தப்படுத்தி மருந்து போட்டு விட்டாள் நட்சத்திரா. பத்து நிமிஷம் கரைந்து போயிருந்தது.

''பரவாயில்லையே... ...... நல்லாத்தான் பண்றே...''

அந்த அமுதா சர்டிபிகேட் ஒன்றைக் கொடுத்து விட்டு மேஜையினின்றும் இறங்கி காலை அகட்டியபடியே நடந்து போனதும் நட்சத்திரா வாஷ் பேஷனுக்கு ஓடிப் போய் குபுக்கென்று வாந்தி எடுத்தாள். காலையில் மெஸ்ஸில் சாப்பிட்ட உப்புமாவும் காப்பியும் கதம்பமாய் வெளியே வந்தது.

டாக்டர் உள்ளே வந்தார். சிரித்தார்.

''என்ன வாந்தியா...? மனசுல அருவருப்பு பட்டா இப்படித்தான். இந்த அமுதா கேஸுக்கே இப்படி வாந்தி பண்றியே...? இன்னும் சிலர்க்கு இருக்கிற வியாதியைப் பார்த்தா...?''

''டாக்டர்... இவங்களையெல்லாம்... ஏன் ஜெனரல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பக்கூடாது? அங்கே போனா நல்ல ட்ரீட்மெண்ட் தருவாங்களே...?''

''அங்கே என்ன ட்ரீட்மெண்ட் தருவாங்களோ... அதையே தான் நானும் தர்றேன்.. இந்த பால்வினை நோய்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் குணமாகும். அடுத்த பொண்ணைக் கூப்பிடலாமா... பேரு... ஆயிஷா...''

நட்சத்திரா சோர்வாய் நடந்து போய்' கதவருகே நின்று குரல் கொடுத்தாள். ''ஆயிஷா...''

கறுப்பாய், குண்டாய் ராட்சசி மாதிரி அந்த ஆயிஷா வந்தாள். டாக்டர் சொன்னார். ''இவளும் அதே கேஸ் தான்... மருந்து போடு...''

அந்த ஆயிஷா டாக்டரைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினாள். ''நர்ஸ் அழகாயிருக்கா... எங்கேர்ந்து புடிச்சுட்டு வந்தீங்க...?''

டாக்டர் எரிந்து விழுந்தார். ''வாயாடாமே
ரூமுக்குள்ளாற போ...''
''போறேன்'' என்றவள், நட்சத்திராவைப் பார்த்து
''வாடியம்மா உள்ளே'' என்றபடி உரசிக் கொண்டு
போனாள்.
அவள் உடம்பினின்றும்
செத்த எலியின் நாற்றம் 'கவுச்'சென்று வீசியது.
நட்சத்திராவின் சிறுகுடல் அவள் வயிற்றை எக்கி
இருதயத்தை முட்டிப் பார்த்தது.

## 9



**ம**த்தியானம் இரண்டு
மணி. குவார்ட்டர்ஸ்.
சாப்பிடாமல் படுத்துக்
கிடந்த நட்சத்திரா
நினைத்தபோதெல்லாம்
போய் வாஷ்பேசனில்
வாந்தி எடுத்தாள். வாந்தி
யாக வெளியே வர
வயிற்றில் ஒன்றும் இல்லாததால் வறட்சி
வாந்தியோடு வெறும் உமிழ்நீர் மட்டும் சொட்டியது.
சாப்பிடப் பிடிக்காமல் துவண்டு போய்
படுத்திருந்தவள் யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டு
எழுந்தாள். போய் கதவைத் திறந்தாள். சிவகுமார்
சிரித்த முகத்தோடு நின்றிருந்தான்.

''என்ன... நீங்க சாப்பிடறதுக்கு இன்னும் மெஸ்
ஸிற்கு போகலையாமே...? டாக்டர் சொன்னார்...''

''ப... பசியே... இல்ல...''

''வேலை பிடிசிருக்கா...?''
கேட்டுக் கொண்டே கதவைத் தாண்டி உள்ளே
வந்தான் சிவகுமார்.

''ம்... ம்...''

''ரொம்ப அருவை பட்டு வாந்தி
எடுத்தீங்களாமே...?''

''ஆ... ஆமா...''

''ரெண்டு நாளைக்கு அப்படித்தான் இருக்கும்...
அப்புறம் பழகிடும்...''

''உங்ககிட்டே ஒரு சின்ன ஆப்ளிகேஷன்...''

''என்ன...?''

''நான் என் கணவர்கிட்டே இப்பவே பேசணும்...



ஆபீஸ் ரூம்ல இருக்கிற போனை நான் யூஸ்
பண்ணிக்கலாமா?''

''தாராளமா... நேத்தைக்கே உங்களுக்கு பர்மிஷன்
குடுத்துட்டேனே... நெம்பரைச் சொல்லுங்க...
லைட்னிங்கால் போட்டு வாங்கித் தர்றேன்...''

ரமேஷின் ஆபீஸ் டெலிபோன் நெம்பரைச்
சொன்னாள்.

''வாங்க.. இப்பவே போன் பண்ணி பேசிடலாம்...''
சிவகுமார் முன்னால் நடக்க அவனைப் பின்
தொடர்ந்தாள் நட்சத்திரா.

காலி திடலில் நடக்கும்போது சிவகுமார்
சொன்னான். ''அம்மாவுக்கு உடம்பு சரியில்லை.
ரெண்டு நாளைக்கு இல்லத்துக்கு வர மாட்டாங்க...''

''அம்மாவுக்கு என்ன உடம்பு...?''

''ஃபீவர் தான்...''

''அம்மாவுக்கும் வயசாயிடுச்சு... இவ்வளவு
சிரமப்பட்டு இந்த இல்லத்தை நடத்தணுமா...?''

''ஒரு பிடிவாதம்தான்... நான் எவ்வளவோ தடவை
சொல்லிப் பார்த்துட்டேன்... கேக்கிற மாதிரியே
இல்லை... அம்மா உயிரோடு இருக்கிற வரைக்கும்
இந்த இல்லம் இருக்கும். அதுக்கப்புறம் இதை
டெமாலிஷ் பண்ணிட்டு ஏதாவது ஒரு ஃபேக்டரியை
கட்டிடுவேன்...''

வெறிச்சோடிப் போயிருந்த ஆபீஸ் அறைக்குள்
நுழைந்தார்கள். டாக்டர் சாப்பிடப் போயிருந்தார்.
மேஜை மேலிருந்த டெலிபோனை நெருங்கி
ரிஸீவரை எடுத்து டெலிபோன் எக்சேஞ்சுக்கு
டயலைச் சுழற்றினான். ரமேஷ் பெயருக்கு பி.பி.
கால் ஒன்றை புக் செய்து விட்டு நட்சத்திராவிடம்
திரும்பினான்.

''கால் இப்ப கிடைச்சுடும்... ஹஸ்பெண்ட்கிட்டே
பேசப் போறீங்க... நான் இங்கே
உட்கார்ந்திட்டிருக்கிறது நாகரீகமில்லை...''

அவன் புன்னகைத்தபடி வெளியேறிய அடுத்த
நிமிஷமே டெலிபோன் கதறியது.

ரிஸீவரை எடுத்தாள். எக்சேஞ்ச் பெண் கேட்டாள்.

''கோயமுத்தூருக்கு லைட்னிங் கால்
போட்டீங்களா?''

''ஆமா...''

''மிஸ்டர் ரமேஷ் லைன்ல இருக்கார்... பேசுங்க...''

''ஹலோ...''

''ஹலோ... நான் ரமேஷ் பேசறேன்... பேசறது யாரு... நட்சத்திராவா?'' ரமேஷின் குரல் தெளிவாய் கேட்டது.

''ஆமா...''

''மறுவாழ்வு இல்லம் எப்படியிருக்கு... உனக்குப் பிடிச்சதா?''

''என்னங்க... நா ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே?''

''என்ன சொல்லப்போறே...?''

''எ... எனக்கு இந்த வேலை பிடிக்கல்லீங்க... இங்கேயிருக்கிற ஒவ்வொருத்தர்க்கும் ஒவ்வொரு வியாதி... நரகம் மாதிரி இருக்குங்க... நான் இன்னிக்கே ஊருக்கு வந்துடறேன்.''

மறுமுனையில் சீறினான் ரமேஷ்.

''என்னது...? ஊருக்கு வரப் போறியா... நர்ஸ் வேலைன்னா பாங்க்ல வேலை பார்க்கிற உத்யோகம் மாதிரின்னு நினைச்சியா? வியாதி வந்தவங்களுக்கு மருந்து தர்றது தான் நர்ஸோட வேலை...''

''அய்யோ... இங்கே இருக்கிற பொண்ணுகளுக்கெல்லாம் மோசமான தொத்து வியாதிங்க... என்னால மத்தியானம் சாப்பிடவே முடியலை...''

''புதுசுல அப்படித்தானே இருக்கும்... முட்டாள்தனமா ஊருக்குப் புறப்பட்டு வந்துடாதே... அம்மா குதறி எடுத்துடுவாங்க...''

நட்சத்திராவுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. ''என்னங்க... நான் சொ... சொல்றதை கொ... கொ... கொஞ்சம்...''

''நீ சொல்றதை நான் கொஞ்சமும் கேட்கலை... நிறையவும் கேட்கலை... ஒரு நல்ல வேலையை ஏன் பிடிவாதமா வேண்டாம் வேண்டாம்ன்னு சொல்றே? உனக்கு இஷ்டமில்லைனா வேலையை விட்டுடு... ஆனா வேலையை விட்டுட்டு வீட்டுக்கு மட்டும் வந்துடாதே... அங்கிருந்தே எங்கேயாவது போயிடு...''

கணவனின் நெருப்புத் துண்டம் போன்ற வார்த்தைகளில் அப்படியே உறைந்து போய் நின்றாள் நட்சத்திரா.

ரமேஷ் மறுமுனையிலிருந்து உறுமினான்.

''என்ன பேச்சையே காணோம்...?''



''.........................''

''வேலையில இருக்கியா... இல்லே... எங்கேயாவது போயிடறியா...?''

''நா... நா... நான் வேலையில இருக்கேன்...''

''அதான் உனக்கு நல்லது. இன்னொரு தடவை. வேலையை விட்டு நின்னுக்கிறேன்ங்கிற பேச்சை எடுக்காதே... இப்போ எங்கிருந்து பேசறே...?''

''இல்லம் ஆபீஸிலிருந்து...''

''போன் நம்பர் என்ன?''

நெம்பரை பார்த்துச் சொன்னாள்.

''சரி... ஏதாவது முக்கியமான.விஷயமா இருந்தா... போன் பண்றேன்...''

''குழந்தை எப்படியிருக்கா?''

''நல்லாயிருக்கா...''

''என்னை ஞாபகம் வெச்சுட்டு அழறாளா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அம்மா கிட்டே சந்தோஷமாயிருக்கா... நீ அவளைப் பத்திக் கவலைப்படாதே... உன்னைக் காட்டிலும் அம்மா அவளை நல்லாவே பார்த்துக்குவா...''

''சரி... ரிஸீவரை வெச்சுடறேன்...''

''இரு... இரு... வெச்சுடாதே... நிர்வாகம் எப்படி? ஸ்மூத்தா இருக்காங்களா?''

''ம்... ம்...''

''ரெண்டாயிரம் ரூபா அட்வான்ஸ் கேட்டுப் பாரேன்...''

''நாலைஞ்சு நாள் போட்டும்...''

''ஞாயித்துக் கிழமை நான் அங்கே வர்றேன். வர்றதுக்குள்ளே கேட்டு வாங்கி வை.''

''ம்... ம்... அப்புறம்?''

''சொல்லு...''

''இங்கேயிருக்கிற குவார்ட்டர்ஸ் ரொம்பவும் வசதியா இருக்குங்க... நீங்களும் நானும் குழந்தையும் இருக்கிறதுக்கு வசதியான வீடு. நீங்க கம்பெனியில சொல்லி மதுரைக்கு மாற்றல் வாங்கிட்டு வந்திட்டீங்கன்னா சௌகரியமா இருக்கும்?''

''அம்மா கிட்டே இதைச் சொன்னா என்னா சொல்லுவாங்க தெரியுமா...?''

''என்ன சொல்லுவாங்க...?''

''கேட்கிறதுக்கு கொஞ்சம் கொச்சையா இருக்கும்.

இருந்தாலும் சொல்றேன். 'புருஷன் இல்லாமே ராத்திரியில அவளாலே தனியா படுக்க முடியாதாமா...? ஒரு குழந்தையைத் தான் பெத்தாச்சே... அப்புறமும் என்னா' ன்னு கேப்பாங்க..."

நட்சத்திராவின் கண்களில் குபுக்கென்று நீர் திரண்டது.

"சரி... ங்க... நீ... ங்க... வர வேண்டாம்..."

ரிஸீவரை வைத்து விட்டு சேலைத் தலைப்பால் நிமிஷ நேரம் முகத்தை பொத்தி அழுது மனப்பாரத்தை கரைத்துக் கொண்டபோது சிவகுமார் உள்ளே வந்தான்.

"என்ன... பேசி முடிச்சுட்டீங்களா...?"

"ம்..."

"கண்ணெல்லாம் சிவந்திருக்கு. அழுதீங்களா...?"

"இல்லையே..."

"உ... உங்க ஹஸ்பெண்ட் என்ன சொன்னார்...?"

"நா... நான் இல்லாதது.... அங்கே அவர்க்கு ரொம்பவும் கஷ்டமா இருக்காம். அத்தையும் மாமாவும் சரியா சாப்பிடக்கூட தோணாமே... என்னையே நினைச்சுட்டிருக்காங்களாம்..."

"குடும்பம்ன்னா இப்படி ஆபெக்ஷனோடு தான் இருக்கணும்... குவார்ட்டர்ஸுக்கு வர்றதைப் பத்தி என்ன சொன்னார்...?"

"சீக்கிரமே ட்ரான்ஸ்பர்க்கு ஏற்பாடு பண்றேன்னு சொன்னார். ஞாயித்துக் கிழமை இங்கே வர்றதாகவும் சொன்னார்..."

"பின்னே இவ்வளவு அழகான ஒய்ஃபை விட்டுட்டு அவராலே ஊர்ல உட்கார்ந்திட்டிருக்க முடியுமா என்ன?"

பளிச்சென்று நிமிர்ந்து சிவகுமாரைப் பார்த்தாள் நட்சத்திரா... எப்போதோ... ஏதோ ஒரு பத்திரிகையில் படித்த அந்த வாக்கியம் மூளையின் மையத்திற்கு வந்து நின்றது. **'ஒரு பெண்ணை அவளுக்கு முன்பாக அழகி என்று புகழ்பவன் ஆபத்தானவன்.'**

"என்ன நட்சத்திரா அப்படிப் பார்க்கிறீங்க?"

"ஒண்ணுமில்லை..."

சொல்லிவிட்டு தலைகுனிந்தபடி தன்னுடைய குவார்ட்டர்ஸை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் நட்சத்திரா.

# 10



பிறகு வந்த நரகமான நான்கு நாட்களும் போய் அந்த ஞாயிற்றுக் கிழமை காலை கண் விழித்தபோது மனசின் மூலையில் கொஞ்சம் சந்தோஷம் எட்டிப் பார்த்தது. கணவன் ரமேஷ், வரப் போகிற சந்தோஷம்.

சீக்கிரமாகவே எழுந்து குளித்து பளிச்சென்று கணவனுக்கு பிடித்தமான சேலைக்குள் நுழைந்து ஏழு மணியிலிருந்தே காத்திருக்க ஆரம்பித்தாள்.

ஞாயிற்றுக்கிழமை மெடிக்கல் செக்கப் கிடையாது என்று நேற்றைக்கு ராத்திரியே டாக்டர் சொல்லியிருந்தார்.

'அவர் வந்தால் எங்கே கூட்டிக் கொண்டு போகலாம்?'

'ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்குப் போய்விட்டு வரலாம்... நேரம் இருந்தால் குற்றாலம் போய் திரும்பலாம்...'

'குழந்தை சங்கீதா என்னைப் பார்த்ததும் எப்படித் தாவுவாள்...?'

இனிப்பான நினைவுகளோடு நிமிஷங்கள் கரைந்து மணி பத்து ஆனபோது காம்பௌண்ட் கேட் அருகே ரமேஷின் தலை தெரிந்தது.

காலி திடலில் வேக வேகமாய் போய் அவனை எதிர் கொண்டாள் நட்சத்திரா. "வாங்க..." என்றவள் ஏமாற்றமான முகத்தோடு கேட்டாள்.

"என்னங்க... குழந்தையை எடுத்துட்டு வராமே வந்திருக்கீங்க...?"

"குழந்தைக்கு உடம்பு சரியில்லை..."

"உடம்பு சரியில்லையா...? என்ன அவளுக்கு?"

"சளி... காய்ச்சல்..."

"மருந்து வாங்கிக் கொடுத்திங்களா?"

"ம்... ம்... எல்லாம் குடுத்திருக்கு... எது உன்னோட குவார்ட்டர்ஸ்...?"

"வாங்க..."

ரமேஷ் சுற்றும் முற்றும் பார்வையைப் போட்டுக் கொண்டே அவளைப் பின் தொடர்ந்தான்.

நட்சத்திரா கேட்டாள். ''அத்தையும் மாமாவும் சௌக்கியமா இருக்காங்களா?''

''ம்... ம்...''

''எனக்கு குழந்தை ஞாபகமாகவே இருக்குங்க...''

''அட்வான்ஸ் கேட்டியா?''

எதிர்பாராத இந்தக் கேள்வி திடீரென்று அவன் உதட்டிலிருந்து வரவும் ஒரு சில விநாடிகள் தடுமாறினாள்.

''எ... என்ன பதிலையே காணோம்...? அட்வான்ஸ் கேட்டியா?''

''இன்னும் கேட்கலை...''

''ஏன் கேட்கலை...''

''கேக்கிறதுக்கு எப்படியோ இருக்கு...''

''சரி நான் கேட்கட்டுமா...?''

''வேண்டாம்... வேண்டாம்... நானே கேக்கறேன்...''

ஜன்னல்களிலும், வராந்தாக்களிலும் நின்று வேடிக்கை பார்த்த பெண்களை ரமேஷும் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தான்.

குவார்ட்டர்ஸ் வந்தது. ''அருமையான குவார்ட்டர்ஸா குடுத்திருங்காங்களே!''

''இது ஒண்ணுதான் இங்கே மனசுக்கு நிறைவான விஷயம்...''

''சம்பளம் நிறைவான விஷயமில்லையா?''

''இந்த இடத்துல ஒருநாள் நீங்க இருந்து பார்த்தாத்தான் தெரியும்...''

''பழையபடி உன்னோட புராணத்தை ஆரம்பிச்சுடாதே... நான் முக்கியமா இங்கே வந்ததே... அட்வான்ஸ் பணத்தை வாங்கிட்டுப் போகத்தான்... ஆபீஸ்ல யாரும் வரலையா...?''

''இனிமேத்தான் வருவாங்க...''

''வந்தாச்சு...''

வாசல் அருகே குரல் கேட்டு திரும்பினார்கள். சங்கமேஸ்வரன் காது வரை இளித்துக் கொண்டு நின்றிருந்தார். ''நான் ஆபீஸுக்கு அரை மணி நேரத்துக்கு முன்னாடியே வந்துட்டேன். என்ன நட்சத்திரா... இவர் தான் உன்னோட கணவரா?''

''ஆமா... ஸார்...'' என்றவள் ரமேஷின் பக்கமாய் திரும்பி சொன்னாள் ''இவர் மேடத்தோட பிரதர்... மிஸ்டர் சங்கமேஸ்வரன்...''

''க்ளாட் டு மீட் யூ... ஸார்...''



ரமேஷ் அவருடைய கையைப் பற்றிக் குலுக்கினான். அவர் சிரித்துக் கொண்டே அவனருகே உட்கார்ந்தார். ''மிஸ்டர் ரமேஷ்... உங்க ஒய்ஃப் நட்சத்திராவுக்கு சோசியல் சர்வீஸ்ல நல்ல ஈடுபாடு இருந்திருக்கணும்... இல்லேன்னா கோயமுத்தூரிலிருந்து இவ்வளவு தூரம் வந்து வேலை பார்க்க முடியுமா? மேடத்துக்கு உங்க மனைவியை ரொம்பவும் பிடிச்சு போச்சு...''

ரமேஷ் சிரித்தான்.

''அவ இங்கே வேலை பார்த்து மத்தவங்களுக்கு உதவியா இருக்கிறதை நினைச்சா எனக்கும் சந்தோஷமாத்தான் இருக்கு ஸார்...''

''அப்புறம் ஒரு கேள்வி - தப்பா நினைச்சுக்கக் கூடாது. நான் குவார்ட்டர்ஸ் வாசலுக்கு வரும்போது ஏதோ அட்வான்ஸ் பணம்... அது இதுன்னு காதுல விழுந்தது. அது என்னான்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

''அ... அ... அது... வந்து...'' ரமேஷ் திணற -

''அதெல்லாம் ஒண்ணுமில்ல ஸார்...'' என்றாள் நட்சத்திரா.

''நோ... நான் புரிஞ்சுக்கிட்டேன். இங்கேயிருந்து ஏதாவது அட்வான்ஸ் எதிர்பார்க்கறிங்களா... ரமேஷ்?''

''.................''

''தாராளமா சொல்லுங்க...''

''அது வந்து... ஒரு அவசரத் தேவை... அதுக்காக கொஞ்சம்...''

''பணம் வேணும்... அவ்வளவு தானே...? எவ்வளவு வேணும்...?''

''ஒரு ரெண்டாயிரம் ரூபா... குடுத்தா... பரவாயில்லை...''

''இந்தாங்க... இப்பவே வாங்கிக்கங்க... நான் அக்காகிட்டேயும் சிவகுமார்கிட்டேயும் சொல்லிக்கிறேன்.''

சங்கமேஸ்வரன் தன் ஜிப்பா பைக்குள் கையை நுழைத்து கற்றையாய் நூறு ரூபாய் நோட்டுக்களை எண்ணி அவன் கையில் திணித்தான்.

''ரொம்ப தாங்க்ஸ் ஸார்...''

''எதுக்கு தாங்க்ஸ்... இது இனாமில்லை ஸார்... கடன்... மாசா மாசம் நட்சத்திராவோட சம்பளத்துல புடிச்சுக்குவோம்...'' என்று சொன்னவர் எழுந்தார்.

''ஊர்லிருந்து வந்திருக்கீங்க... பேசிட்டிருங்க...
போரடிச்சா வெளியில போய்ட்டு வாங்க...
ராஜபாளையத்துக்குப் பக்கத்துல அய்யனார் கோயில்
அருவி இருக்கு... அருமையான இடம்...
கோயிலுக்குப் போறதாயிருந்தா ஸ்ரீவில்லிபுத்தூர்
கோயிலுக்கு போய்ட்டு வாங்க...''
சொல்லிக் கொண்டே வெளியேறினார்.
ரமேஷ் பணத்தை எண்ணி சர்ட் பாக்கெட்டுக்குள்
திணித்துக் கொண்டே பற்கள் பூராவும் தெரிகிற மாதிரி
சிரித்தான்.
''ரொம்பவும் நல்ல ஆட்களா தெரியறாங்க...''
''நீங்க அட்வான்ஸ் கேட்டது எனக்கு கொஞ்சம்
கூட பிடிக்கலை. வேலைக்கு சேர்ந்து அஞ்சு நாட்கள்
கூட ஆகலை. அவங்க என்ன நினைப்பாங்க...''
''அவங்க ஒண்ணும் நினைக்க மாட்டாங்க...
நீதான் எதை எதையோ நினைச்சு மனசைப் போட்டு
குழப்பிக்கறே...''
சொன்னவன் எழுந்து போய் ஜன்னலையும் வாசல்
கதவையும் சாத்திவிட்டு வந்தான். நட்சத்திராவின்
தோள் மீது கையை வைத்து கட்டிலில் உட்கார
வைத்து தானும் உட்கார்ந்து அவளைத் தழுவ
முயன்றான்.
''என்னங்க... இது...?''
விருட்டென்று எழுந்து நின்றாள் நட்சத்திரா.
ரமேஷ் புன்னகைத்தான். ''புரியலையா...?
உன்னோட உடம்பைத் தொட்டு ஒரு வாரமாச்சே...''
''எனக்கு வேண்டாங்க...''
''வேண்டாம்ன்னா...?''
''எனக்குப் பிடிக்கலை...''
''எனக்குப் புரியலை...''
''நீ பேசறது எனக்குப் புரியலை...''
''வந்த இடத்துல இதெல்லாம் வேண்டாங்க...
வாங்க. கோயிலுக்கு போய்ட்டு வரலாம்...
''இப்ப நீ கட்டில்ல வந்து உட்காரப் போறியா
இல்லையா?''
''கோயிலுக்கு...?'' பேச முயன்றவளை பளீரென்று
எழுந்து அறைந்தான் ரமேஷ். ''என்னடி... உம்மனசுல
நீ என்னதான்டி நினைச்சுட்டிருக்கே...? நீ
கட்டிலுக்கு வரலைன்னா எனக்கொண்ணும் உலகம்
இருட்டிப் போகாது... நான் வர்றேன்.''
கோபமாய் கத்தியவன் -
படீரென்று அறைக் கதவைத் திறந்து கொண்டு



குவார்ட்டர்ஸினின்றும் வெளியேறினான்.
கன்னத்தை தேய்த்துக் கொண்டே ஜன்னல்
வழியே அவன் போவதை பார்த்துக்
கொண்டிருந்தாள் நட்சத்திரா.

# 11



இடுப்புக்கு லுங்கி
யைச் சுற்றிக் கொண்டு
சோபாவுக்கு சாய்ந்து
உட்கார்ந்திருந்த சிவகுமார்,
உள்ளே நுழைந்த
சங்கமேஸ்வரனிடம்
கேட்டான்.
''என்ன மாமா அட்வான்ஸ் கொடுத்திட்டீங்களா?''
''ம்... குடுத்துட்டேன்... நீ சொன்னது கரெக்ட்
சிவா... அவ புருஷன் சரியான காசாசைப்
பிடிச்சவன்தான்... அட்வான்ஸ் பணம் குடுத்ததுமே
மூஞ்சி பூராவும் பல்லாயிட்டான்...''
''நான்தான் அன்னிக்கு அந்த லைட்னிங்கால்
பேச்சை பூராவும், என்னோட பர்சனல் ரூம்
இண்டர்காமிலிருந்து கேட்டேனே... இவ்வளவு
அழகான பெண்டாட்டியை விட்டுட்டு எப்படித் தான்
தனியா இருக்கானோ...? அவளைப் பேசற ஒவ்வொரு
வார்த்தையும் எப்படி இருக்குத் தெரியுமா மாமா?
மேலே நெருப்புப் பட்ட மாதிரி இருக்கு...
இவ 'இந்த வேலை எனக்கு வேண்டாம்'ன்னு
சொல்றா... அவன் மறுபக்கத்திலிருந்து 'வேலைய
விட்டு நின்னே... நீ வீட்டுக்கு வரக்கூடாது...
அப்படியே தான் போயிடணும்'ன்னு தயவு
தாட்சண்யம் இல்லாமே சொல்றான்...''
''இது நமக்கு அனுகூலமான விஷயமாச்சே...!''
''என்னதான் அனுகூலமா இருந்தாலும் அவ
அவ்வளவு சீக்கிரமா மசிஞ்சுட மாட்டாள்னு
எம்மனசுக்குப் படுது மாமா...''
''நீ அவசரப்பட்டுடாதே சிவா... அவளைக்
கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும்...
அவசரப்பட்டா மிரண்டுடுவா.''
''அவ எப்படியும் வேலையை விட்டுப் போக
மாட்டாள்ன்னு தீர்மானமா தெரிஞ்சுடுச்சு...

கொஞ்சம் விட்டே பிடிப்போம்...''

''கொஞ்சம் மெதுவா பேசு... அம்மா பக்கத்து ரூம்ல தான் இருக்கா... நட்சத்திராவை மோப்பம் பிடிக்கிறது தெரிஞ்சுதுன்னா கண்டபடி எகிறிடுவா...''

பக்கத்து அறையிலிருந்து குரல் வந்தது.

''டேய்... சங்கமேஸ்வரா...''

''சொன்னேன்ல உன்னோட அம்மா கூப்பிடறா... நீ இங்கேயே இரு. நா என்னான்னு போய் கேட்டுட்டு வர்றேன்...''

சங்கமேஸ்வன் நகர்ந்து பக்கத்து அறைக்குள் நுழைந்தார். படுக்கையில் சம்மணமிட்டு உட்கார்ந்து வெந்நீர் பையை கழுத்துக்கு ஒத்தடம் வைத்துக் கொண்டிருந்தாள் நாகம்மாள்.

''என்னக்கா... எதுக்குக் கூப்பிட்டே...?''

''நீ மட்டுந்தான் இன்னைக்கு இல்லத்துக்கு போயிருந்தியா...?''

''ஆமாக்கா...''

''பக்கத்து ரூம்ல சிவகுமார் கிட்டே என்னடா கிசுகிசுன்னு பேசிட்டிருக்கே... உன் வயசென்ன அவன் வயசென்ன... வர வர உம்போக்கு சரியில்லே...''

''ஏன்க்கா அப்படி சொல்றே... அடுத்த மாசம் கவர்மெண்டிலிருந்து ஆடிட்டிங் வரப் போறாங்க... அதுக்கு செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளைப் பத்தி நானும் சிவாவும் பேசிட்டிருந்தோம்...''

''முன்னேற்பாடு எதுக்காக பண்ணணும்... கணக்கு வழக்கெல்லாம் ஒழுங்காகத்தானே வெச்சிருக்கீங்க...?''

''ஆமா...''

''அப்புறமென்ன பயம்...?''

''இருந்தாலும் பார்த்துக்க வேண்டாமா?''

''சரி.. சரி... இன்னிக்கு நட்சத்திராவோட புருஷன் வந்தானா?''

''ஆமா... வந்தான்... ரெண்டு பேரும் குவார்ட்டர்ஸ்ல உட்கார்ந்து பேசிட்டிருந்தாங்க... நான் வந்துட்டேன்...''

''அந்த இங்கிதமாவது உனக்கு தெரிஞ்சிருக்கே...!'' சொல்லிக் கொண்டே வெந்நீர் பையை அவரிடம் நீட்டினாள்.

''பையில வெந்நீர் சூடு ஆறிப் போச்சு... சமையல்காரிகிட்ட கொடுத்து வேற தண்ணி



ரொப்பிட்டு வரச் சொல்லு...''

வெந்நீர் பையை வாங்கிக் கொண்டு நகர்ந்தார் சங்கமேஸ்வரன்.



# 12

மூக்குக் கண்ணாடியை மாட்டிக் கொண்டு டேபிளின் மேல் நான்கைந்து இன்லேண்ட் லெட்டர்களை வைத்துக் கொண்டு யார்க்கோ லெட்டர் எழுதும் முயற்சியில் இருந்த டாக்டர் தயாளீஸ்வரன், ஆபீஸ் அறை வாசலில் நிழலாடவும் நிமிர்ந்தார்.

நட்சத்திரா நின்றிருந்தாள்.

''என்னம்மா....?''

''ஸ்ரீவில்லிபுத்தூர் வரைக்கும் போயிட்டு வர்றேன் டாக்டர்....''

''எதுக்கு .... கோயிலுக்கா?''

''ஆமா...''

''ஹஸ்பெண்ட்கூடத் தானே?''

''இல்ல டாக்டர்... அவர் ஊருக்குப் போயிட்டார்...''

மூக்கு கண்ணாடியை சட்டென்று கழட்டினார் டாக்டர். ''என்னம்மா இது ....? அவர் வந்து அரை மணி நேரம் கூட இருக்காது... அதுக்குள்ளே புறப்பட்டுட்டாரா?''

''ஊர்ல கொஞ்சம் அவசர வேலையிருக்காம்... அதான் போயிட்டார். நான் மட்டும் இப்போ கோயிலுக்கு கிளம்பறேன்...''

''போயிட்டு வாம்மா... மதுரை போற எல்லா பஸ்ஸுமே ஸ்ரீவில்லிபுத்தூர் வழியா போய்த்தான் ஆகணும்... கையைக் காட்டினா பஸ்ஸை நிறுத்துவாங்க... பார்க்க வேண்டிய கோயில்...''

நட்சத்திரா வெளியே வந்தாள். பகல் பதினோரு மணி வெய்யில் தலைக்கு மேலே அமர்க்களம் பண்ண - ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கப்பால் தெரிந்த மெயின் ரோட்டில் போக்குவரத்து சுத்தமாய் காணாமல் போயிருந்தது. கொஞ்சம் தொலைவில் தெரிந்த 'வெங்கடேஸ்வரா வில்லோ பாக்டரி'

யிலிருந்து ஜெனரேட்டர் ஓடும் சத்தம் மட்டும்
'த்தட்... த்தட்' என்று கேட்டுக் கொண்டிருந்தது.
நட்சத்திரா வெய்யிலில் வறுபட்ட அந்தப் புழுதி
மண்ணில் வேக வேகமாய் நடந்து மெயின்
ரோட்டைத் தொட்டு புளியமரத்துக்குக் கீழே வந்து
நின்றாள். வேகமாய் நடந்து வந்ததில் முதுகும்,
கக்கங்களும் சொதசொதவென்று வியர்த்துப்
போயிருந்தது.

பஸ் வருகிறதா என்று எதிர் திசையைப் பார்த்தவள்
தனக்குப் பின்னால் எழுந்த ''சிஸ்டர்'' என்ற குரலைக்
கேட்டதும் திரும்பினாள்.

சிவப்பாய் ஒடிசலாய் அடர்த்தியான
தலைமுடியோடு அந்த இளைஞன் நின்றிருந்தான்.
முகத்தில் படிப்பு வாசனை அடித்தது.

''யா... யார் நீங்க...?''

''சிஸ்டர்... என்னோட பேர் போஸ்... 'மக்கள்
விழிப்புணர்ச்சி மன்றம்' என்கிற பேர்ல
ராஜபாளையத்துல ஒரு அமைப்பை நிறுவி அதுக்கு
தலைவரா இருக்கேன்... நீங்க இந்த இல்லத்துல
நர்ஸா வேலை பார்க்கறீங்க இல்லையா?''

''ஆ...மா...''

''உங்க சொந்த ஊர் கோயமுத்தூர்?''

''ஆ...மா...''

''அவ்வளவு தூரத்திலிருந்து வந்து நீங்க இங்கே
நர்ஸா வேலை பார்க்கிறது சந்தோஷப்படக்கூடிய
விஷயம்தான்... ஆனா நீங்க சேர்ந்த இடம்
சரியில்லை...''

நட்சத்திரா போஸை ஏறிட்டாள்.

''நீ... நீங்க என்ன சொல்றீங்க?''

''மகளிர் மறுவாழ்வு இல்லத்தை ஆரம்பிச்ச
நாகம்மாளைப் பற்றி நான் எந்தக் குறையும் சொல்ல
மாட்டேன்... ஆனா... அந்தம்மாவோட தம்பி
சங்கமேஸ்வரனும் மகன் சிவகுமாரும் சரியில்லை...''

''நீங்க சொல்றது எனக்குப் புரியலை...''

''புரியும்படியாவே சொல்றேன்... இந்த மறுவாழ்வு
இல்லத்துக்கு அரசாங்கம் மாசத்துக்கு ரெண்டு லட்ச
ரூபா மான்யம் ஒதுக்கியிருக்கு... ஆனா சிவகுமாரும்,
சங்கமேஸ்வரனும் இல்லத்துக்காக அரை லட்சம்
ரூபாய் கூட செலவு பண்ண மாட்டாங்க... மீதிப்
பணத்தை அம்மாவுக்கே தெரியாமே இவங்க
அமுக்கிடுவாங்க... அந்த கொள்ளையடிச்ச



பணத்துல டாக்டர்க்கும் பங்கு உண்டு...''

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''எனக்கு மட்டுமில்லை... ஊருக்கே தெரியும்
சிஸ்டர்...''

நட்சத்திரா சிரித்தாள்.

''என்ன சிஸ்டர் சிரிக்கிறீங்க?''

''மந்திரிகளே இந்த நாட்டைக் கொள்ளையடிச்
சுட்டிருக்காங்க... இனி சாதாரண ஜனங்களைப் பத்தி
சொல்ல என்ன இருக்கு... அரசாங்கம் ஒதுக்கற
ரெண்டு லட்சத்தையும் ஒரேயடியா சுருட்டிக்காமே
அரை லட்சத்தையாவது இல்லத்துக்காக செலவு
பண்றாங்களே... அதைச் சொல்லுங்க...''

''சிஸ்டர்... இந்த இல்லத்தைப் பத்தின சில
உண்மைகளை தெரிஞ்சுக்காமே நீங்க இங்கே வந்து
வேலையில் சேர்ந்துட்டீங்க...''

''என்ன உண்மை...?''

''விபசாரிகளைத் திருத்தப் போறோம்ங்கிற
போர்வையில அரசாங்க பணத்தைக்
கொள்ளையடிக்கிறதுக்காகவே இந்த இல்லத்தை
சிவகுமாரும், சங்கமேஸ்வரனும் நடத்திட்டு
வர்றாங்க...''

''அதுதான் சொல்லிட்டீங்களே! அப்புறம்?''

''ரெண்டு பேருமே பெண் லோலர்கள். இந்த
இல்லத்தில் நர்ஸ் வேலை பார்க்க வந்த எத்தனையோ
பெண்களைப் பாழ் பண்ணியிருக்காங்க...''

''இதையெல்லாம் நீங்க ஏன் போலீஸுக்கு
சொல்லக்கூடாது...?''

''எத்தனையோ மகஜர் குடுத்துட்டு
வந்திருக்கோம்... எல்லா மகஜருமே குப்பைக்
கூடைக்கு போயிடும்... அவங்களுக்கு அரசியல்
செல்வாக்கு நிறைய இருக்கு சிஸ்டர்...''

நட்சத்திரா அந்த இளைஞனை நிமிர்ந்து
பார்த்தாள். இளைஞனின் முகத்தில் தீவிரம் தெரிந்தது.
பொய் சொல்கிறவன் மாதிரி தெரியவில்லை.
மெல்லிய குரலில் கேட்டாள்.

''மிஸ்டர் போஸ்! நான் இந்த விஷயத்தில்
உங்களுக்கு எந்த வகையில் உதவணும்...?''

''நீங்க எங்களுக்கு உதவ வேண்டாம் சிஸ்டர்...
உங்களை நீங்களே காப்பாத்திட்டா போதும்...
என்னோட சொந்த சகோதரியா நினைச்சு
உங்ககிட்டே சொல்றேன்...''

''தேங்க்யூ...''
தூரத்தில் மதுரை பஸ் வரும் சத்தம் கேட்டது.
''எங்கே போறீங்க சிஸ்டர்...?''
''ஸ்ரீவில்லிபுத்தூர்...''
''இருங்க நானே பஸ்ஸை நிறுத்தறேன்...'' சொன்ன போஸ் ரோட்டின் குறுக்கே போய் நின்று பஸ்ஸை மறிக்கிற மாதிரி கையையசத்தான்.

பஸ் அவளருகே வந்து நின்றது.

''ஏறிக்குங்க... சிஸ்டர்... நான் சொன்னதை மனசுல வெச்சுக்குங்க... உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டா... பக்கத்துல தான் என்னோட வில்லோ பாக்டரி...''

தலையாட்டிக் கொண்டே பஸ்ஸில் ஏறினாள் நட்சத்திரா. போஸ் சொன்ன உண்மைகளில் மனம் இப்போது ரொம்பவும் கலவரப்பட்டுப் போயிருந்தது.

## 13



நாட்கள் குதிரையில் ஏறிக் கொண்ட மாதிரி வேகமாய் ஓடியது. அன்றைக்கு அவள் வேலைக்குச் சேர்ந்த இருபதாவது நாள். அந்த இருபது நாட்களில் ரமேஷுக்கு நான்கைந்து கடிதங்களை எழுதியிருந்தாள் நட்சத்திரா. ஒரு கடிதத்திற்கும் அவனிடமிருந்து பதிலில்லை... ஆபீஸுக்கு பி.பி., கால் போட்டபோது அவன் இல்லை என்ற பதில் வந்தது. 'ஒரு நடை ஊருக்குப் போய் பார்த்து விட்டு வருவது தான் உத்தமம்'. அன்றைக்கு சாயந்தரம் இல்லத்துக்கு வந்த சிவ்குமாரிடம் தன்னுடைய எண்ணத்தைச் சொன்னாள். அவன் தன் தாடையை ஆட்காட்டி விரலால் சொறிந்து கொண்டே மெல்லிய குரலில் கேட்டான்.

''நட்சத்திரா... நீங்க இங்கே வந்து வேலைக்கு சேர்ந்த ரெண்டாவது நாள் ஒரு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப் பண்ணி கொடுத்தோமே... ஞாபகமிருக்கா...?''

''ம்...''



''அதை படிச்சுப் பார்த்தீங்களா?''

''ம்...''

''அந்த அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்ல மூணாவது ஷரத்து என்னான்னா... ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை தான் ஊருக்கு போகணும்ன்னு இருக்கு... நீங்க இப்போ வேலைக்கு சேர்ந்து இருபது நாள் தான் ஆச்சு... இன்னும் நாப்பது நாள் கழிச்சு தான் ஊருக்குப் போக முடியும்...''

''ஸார்... என் ஃபேமிலியில ஒரு பிராப்ளம்... அங்கிருந்து லெட்டர் வரலை ... என்னோட கணவர் ஃபோன்ல கிடைக்கமாட்டேனென்கிறார்... இந்த ஒரு தடவை ஊருக்கு போய்ட்டு வந்துடறேன்...''

''ஸாரி மிஸஸ் நட்சத்திரா... உங்க குடும்ப பிரச்சனைகளைப் பத்தி எனக்குக் கவலையில்லை... ட்வெண்ட்டி ஃபோர் அவர்ஸும் நீங்க இருக்கணும்ங்கிறதுக்காகத்தான் உங்களுக்கு அதிகப்படியான சம்பளமும் குடுத்து குவார்ட்டர்ஸும் குடுத்திருக்கோம்... உங்க கணவர் கேட்டாரேங்கிறதுக்காக அட்வான்ஸும் குடுத்திருக்கோம்...''

''நான் போய் ... அங்கே என்ன நிலவரம்ன்னு பாத்துட்டு ஒரே நாள்ல திரும்பி வந்துடறேன்...''

''எனக்குத் தெரியும்... நீங்க போனா திரும்பி வர மாட்டீங்கன்னு...''

''நோ ... கண்டிப்பா வருவேன்...''

சிவகுமார் சிரித்தான். ''இதுக்கு முன்னாடி இங்கே வேலை பார்த்த நர்ஸுகளும் இப்படித் தான் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி ஊருக்கு போயிடுவாங்க... அப்புறம் அங்கிருந்து ரிசைன் லெட்டர் அனுப்புவாங்க...''

''நான் அப்படியில்லை... ஸார்... இந்த உத்யோகத்தை நான் வேண்டாம்ன்னு சொன்னாலும் என்னோட கணவரும், மாமனாரும், மாமியாரும் விட மாட்டாங்க...''

''ஸாரி... நீங்க... இன்னும் நாற்பது நாள் கழிச்சுத் தான் கோயமுத்தூர் போக முடியும்... இனிமேலும் இதைப் பத்தி என்கிட்டே பேசாதீங்க...''

சிவகுமார் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தான். அருகே நின்றிருந்த டாக்டரிடம் மெல்லிய குரலில் சொன்னான்.

''டாக்டர்... என்னோட பர்மிஷன் இல்லாமே... நட்சத்திராவை வெளியே எங்கேயும் அனுப்பாதீங்க...''

டாக்டர் தயாளீஸ்வரன் தலையசைத்தார்.

காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் நிறுத்தியிருந்த தன்னுடைய டால்பின் காரை நோக்கி கால்களைப் பெயர்த்துக் கொண்டே டாக்டர்க்கு கண்ணைக் காட்டி பின்னாடியே வரச் சொன்னான்.

டாக்டரும் பின்னாடியே வந்தார்.

''டாக்டர்... இனிமே நீங்க கொஞ்சம் ஜாக்ரதையா இருக்கணும் ... கிளி பறக்கப் பாக்குது... எங்கேயும் வெளியே விடாதீங்க .. வாட்ச்மேன் கிட்டேயும் சொல்லிடுங்க...''

''சரி... ஸார்...''

''அப்புறம்... அந்த 'மக்கள் விழிப்புணர்ச்சி மன்ற'த் தலைவன் போஸ்... இவளை அடிக்கடி சந்திச்சுப் பேசறானாம்... அவன் ஏதோ சொல்லித்தான் இவ மனசு மாறியிருக்கா...''

''நோ... ஸார்... நிஜமாகவே இவளுக்கு வீட்டுப் பிராப்ளம் இருக்கு... புருஷன் கிட்டயிருந்து லெட்டர் வரலைன்னா எந்தப் பொண்ணுக்குமே மனசு கஷ்டமாத்தானே இருக்கும்...?''

''அதைப் பத்தியெல்லாம் நாம கவலைப்பட்டிட்டிருக்க முடியாது டாக்டர்... நானும் மாமாவும் இன்னிக்கு ராத்திரி பத்து மணிக்கு மேலே இங்கே வர்றோம். அவளைத் தொடப் போறோம்...''

டாக்டர் திடுக்கிட்டார்...!

''இன்னிக்கேவா..?''

''ஆமா...''

''நாம நினைக்கிற மாதிரி அவ மசியிற பொண்ணில்லை ஸார்...''

''அவளுக்கு சுய நினைவு இருந்தாத்தானே... எங்களுக்கு மசிய மாட்டா. அந்த சிங்கப்பூர் மாத்திரையில அரை மாத்திரை பால்ல கலந்து குடுத்துடுங்க... நாளைக்கு மத்தியானம் பனிரெண்டு மணி வரைக்கும்... அவ உடம்பு நமக்கு சொந்தம்.. இஷ்டப்படி விளையாடிட்டு நல்ல பிள்ளைகளா இருந்துக்கலாம்...''

''மேடம்...?''

''அம்மாவைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க... அம்மாவை இன்னும் ரெண்டு நாள்ல மதுரைக்கு கொண்டு போய் ஆஸ்பிடல்ல சேர்க்கப் போறேன்... மூச்சிழுப்பும், இருமலும் அதிகமாயிடுச்சு..''

காருக்குள் ஏறி உட்கார்ந்தான் சிவகுமார்.

''சொன்னதை மறந்துடாதீங்க... நானும் மாமாவும்



சரியா பத்து மணிக்கு வருவோம்... நாங்க வரும்போதே நட்சத்திரா மயக்கமாயிருக்கணும்......''

தலையாட்டினார் டாக்டர்.

## 14



நட்சத்திரா ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். 'ராத்திரி எட்டு மணிக்கு மேல் மெஸ்ஸுக்கு சாப்பிடப் போவது போல் பாவ்லா காட்டி விட்டு பின் பக்க சுவரேறிக் குதித்து மெயின் ரோட்டுக்குப் போய் பஸ்ஸைப் பிடித்து விடிவதற்குள் கோயமுத்தூர் போய் சேர்ந்து விட வேண்டும்.'

எட்டு மணி அடிப்பதற்காக காத்திருந்தாள் நட்சத்திரா. இல்லத்தின் வராந்தா அறைகளிலிருந்து பெண்களின் பேச்சு சத்தமும், சிரிப்பு சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. டாக்டர் தயாளீஸ்வரனின் அறையில் ஒளிர்ந்து கொண்டிருந்த டியூப் லைட் வெளிச்சம் காலி திடலில் பிரகாசமாய் விழுந்திருந்தது.

இல்லத்தின் தண்டவாளத் துண்டில் எட்டு மணி அடிக்கப்பட்டதும் நட்சத்திரா எழுந்தாள். பணத்தை பர்ஸில் போட்டு பிளவுஸுக்குள் திணித்துக் கொண்டாள். குவார்ட்டர்ஸின் அறைக் கதவை சாத்தி வாசல் பக்க லைட்டை அணைத்து விட்டு பின் பக்கமிருந்த மெஸ்ஸை நோக்கி இருட்டில் நடந்து போனாள்.

காலாவதியான எண்ணெய் டின் ரோலர்கள் சுவரோரமாய் குவித்து வைக்கப்பட்டிருக்க அதனருகே வந்து நின்றாள். மேலே ஏறினால் டின்கள் உருண்டு தன்னைக் காட்டித் தந்து விடக்கூடிய அபாயம் இருக்கிறதாவென்று ஒரு முறை அந்த டின்களை அசைத்துப் பார்த்துக் கொண்டாள். 'நானொன்றும் சரிந்து உன்னைக் காட்டிக் கொடுத்து விட மாட்டேன்... தைரியமாய் ஏறு' என்கிற மாதிரி டின்கள் 'திம்'மென்று உட்கார்ந்திருந்தன. சேலையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு முதல் டின்னின் மேல் காலை வைத்து ஜாக்கிரதையாய் ஏறினாள் நட்சத்திரா. வழுக்குகிற சமயங்களில் சுவரைப் பிடித்துக்

கொண்டாள். அங்குலம் அங்குலமாய் மேலே உயர்ந்து சுவரின் உச்சியைத் தொட்டு மறுபக்கம் எட்டிப் பார்த்தாள்.

ஒரே இருட்டு. தொலைவில் மம்சாபுரத்தின் வீடுகளில் வெளிச்சப் பொட்டுக்கள் மின்னின. ஒரு நாய் எங்கிருந்தோ குரைக்கும் சத்தம் கேட்டது.

நட்சத்திரா சுவரின் உச்சியில் உட்கார்ந்து கீழே இருட்டில் இடம் பார்த்து தொம்மென்று குதித்தாள். குதித்தவள் உடனே நிற்க முடியாமல் பாலன்ஸ் தவறி கீழே விழுந்து எழுந்தாள்.

கண்களைக் கொட்டி கொட்டி 'மெயின் ரோட்டுக்கு எந்த வழியாகப் போனால் பக்கம்' என்று பார்த்துக் கொண்டு நடந்தாள்.

''அப்படிப் போகாதே நட்சத்திரா... அந்தப் பக்கம் ஒரே கருவேல முள்ளுச் செடி... பாம்புகளின் நடமாட்டமும் இருக்கும். இந்தப் பக்கம் போயேன்...''

பின் பக்கம் குரல் கேட்டு, தூக்கி வாரிப் போட்டுத் திரும்பினாள் நட்சத்திரா. டாக்டர் தயாளீஸ்வரன் கையில் டார்ச்சோடு நின்றிருந்தார்.

''டா...க்..டர்...''

''நானே தான்! நீ இப்படி ஏதாவது இன்னிக்குப் பண்ணுவேன்னு எனக்கு நல்லாத் தெரியும்... அதான் உம்மேலே ஒரு கண்ணை வெச்சுட்டிருந்தேன்... பரவாயில்லை... நல்லாவே சுவர் ஏறிக் குதிக்கிறே...!''

''டாக்டர்... நான் ஊருக்குப் போயிட்டு ஒரே நாள்ல திரும்பி வந்துடறேன்...''

''நிஜமா... நீ ஊருக்காப் போறே?''

''ஆமா... டாக்டர்...''

''நோ... நான் நம்ப மாட்டேன்... அந்த போஸும் நீயும் சேர்ந்து இங்கே நடக்கிற சில விவகாரங்களைப் போலீஸ்ல சொல்லப் போறீங்க!''

''நோ... டாக்டர்... இங்கே நடக்கிற விவகாரங்களைப் பத்தி எனக்கு அக்கறையில்லை... எனக்கு என் குழந்தையைப் பார்க்கணும்... என் கணவரோட பேசணும்... அவ்வளவுதான்...''

''நீ அப்படி ஊருக்குப் போறதாயிருந்தா சிவகுமார்கிட்டே சொல்லிட்டுத்தான் போகணும்... மரியாதையா எம் பின்னாடி வா...''

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே நட்சத்திரா குபுக்கென்று திரும்பி எதிர்திசையில் ஓட ஆரம்பித்தாள்.

''ஏ... ஏய்... நட்சத்திரா... நில்லு...''



டாக்டர் துரத்த ஆரம்பித்தார். கருவேல முள் செடிகளுக்கு மத்தியில் கலங்கலாய் தெரிந்த ஒற்றையடிப் பாதையில ஒரு கறுப்பு நிழல் மாதிரி ஓடிக் கொண்டிருந்தாள் நட்சத்திரா.

'இவளைப் பிடிக்க முடியுமா?'

வேகத்தை அதிகரிக்க முயன்ற டாக்டரின் தோள் மேல் ஒரு கை விழுந்து அவர் வேகத்தைத் தடுக்க - திடுக்கிட்டுப் போய் திரும்பினார்.

யூனிஃபார்மை தவிர்த்திருந்த இன்ஸ்பெக்டர் முருகேஷ் கையில் பேனா டார்ச்சோடு நின்றிருந்தார்.

''நீ... நீ... நீங்க...?''

''இன்ஸ்பெக்டரே தான்...! கடந்த பதினஞ்சு நாளா எனக்கு, இந்த இல்லத்தைக் கண்காணிக்கிற ட்யூட்டிதான் டாக்டர்.... இங்கே நடக்கிற விவகாரங்கள்ல பாதி விவகாரங்களை நானே கண்ணால பார்த்துட்டேன். மீதியை நீங்களும் சிவகுமாரும், அந்த சங்கமேஸ்வரனும் தான் சொல்லணும்...!''

டாக்டர் தயாளீஸ்வரன் வியர்த்துப் போய் உலர்ந்த தொண்டையில் கத்தினார்... ''அ... அந்த... அந்தப் பொண்ணு?''

''கவலையே படாதீங்க டாக்டர்... எங்கேயும் போயிடமாட்டா... மெயின் ரோட்ல ரெண்டு போலீஸ் கான்ஸ்டபிள்ஸ் மப்டியில் நின்னுட்டிருக்காங்க... அந்தப் பொண்ணை அவங்க மடக்கிடுவாங்க...''

## 15



மதுரை ரயில்வே ஸ்டேஷன். இரவு மணி பத்தே கால். கோயமுத்தூர் போகும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்ஸில் லேடீஸ் கம்பார்ட்மெண்ட்டில் ஜன்னல் அருகே உட்கார்ந்திருந்தாள் நட்சத்திரா. வெளியே பிளாட்பாரத்தில் இன்ஸ்பெக்டர் முருகேஷ் நின்றிருந்தார்.

''நீ கோயமுத்தூர் போய்ட்டு எப்போ திரும்பி வருவே...?''

''ரெண்டு நாள்ல வந்துர்றேன் ஸார்...''

''வரும்போது உம் புருஷனையும் கூட்டிட்டு

வரணும்... அந்த ட்ரஸ்ட் மேலே போலீஸ் போடப் போகிற கேஸ்ல நீதான் முக்கியமான விட்னஸ்...''

நட்சத்திரா தலையசைத்தாள். தலையசைத்துக் கொண்டே கண்களில் நீர் மின்னச் சொன்னாள்.

''ஸார்... நீங்க மட்டும் சமயத்துக்கு வராமே இருந்திருந்தா என்னோட நிலைமை என்னாகியிருக்கும்ன்னு...''

முருகேஷ் சிரித்தார்.

''அதான் போலீஸ்... நீ போய் உன்னோட வீட்டு பிராப்ளத்தை சால்வ் பண்ணிட்டு வா... நான் அந்தப் பசங்களை உள்ளே தள்ளறதுக்கான சார்ஜ் ஷீட்டை பிரிப்பேர் பண்ணி வெக்கறேன்...''

ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் 'ப்ராங்க்க்'' என்று அலறி பிளாட்பாரத்தை மெதுவாய் விவாகரத்து செய்ய ஆரம்பித்தது.

## 16



**வி**டியற்காலை ஐந்து மணி. கோவை ஜங்ஷனின் ஐந்தாவது பிளாட்பாரத்தை விட்டு வெளியே வந்தாள் நட்சத்திரா. ஸ்டேஷனின் உள்ளும் புறமும் சோடியம் வேபர் விளக்குகள் சந்தன நிற வெளிச்ச மழையைப் பொழிந்து கொண்டிருந்தன.

சென்னையிலிருந்து நீலகிரி எக்ஸ்பிரஸ்ஸில் வரப் போகும் ஒரு மந்திரியை வரவேற்க... கட்சிக் கொடிகளோடும் ரோஜா மாலைகளோடும் ஒரு கும்பல் நின்றிருந்தது. ஆட்டோ டிரைவர்கள் கிராக்கி பிடிப்பதற்காக ஸ்டேஷன் படிகளில் காத்திருக்க நட்சத்திரா ஒரு ஆட்டோ டிரைவரை நெருங்கினாள்.

''சாயிபாபா காலனி போகணும்...''

''போகலாம்... உக்காரம்மா...'' என்று உலக மகா மரியாதையோடு சொன்ன டிரைவர்... ''பனிரெண்டு ரூபா ஆகும்'' என்று கிசுகிசுத்தார்.

''வாங்கிக்கிங்க... கொஞ்சம் வேகமா போங்க...''

பதினைந்து ரூபாய் சொல்லியிருக்கலாமோ என்ற ஆதங்கத்தோடு ஆட்டோவை ஸ்டார்ட் செய்து கிளப்பினார் டிரைவர். குளிர் காற்றில் ஆட்டோ நீந்திக் கொண்டிருக்க நட்சத்திராவின் மனம் பயத்தில்



பரபரவென்று யோசித்தது. திடீரென்று வீட்டில் போய் நின்றால் எல்லோர்க்குமே அதிர்ச்சியாய் இருக்கும். 'உன்னை யார் வரச் சொன்னது?' மாமியார்காரி எகிற, மாமனார் முனகுவார். இவர் சிவப்பாய் முறைப்பார்.

'நடந்த உண்மைகளைச் சொன்னால் ஓரளவுக்கு சமாதானமாகி...'

''சாயிபாபா காலனியில் எந்த இடம்மா...?''

''அழகேசன் தெரு...'' ஆட்டோ மேம்பாலத்தில் ஏறி சர்க்கிளை சுற்றிக் கொண்டு ப்ரூக் பாண்ட் ரோட்டில் 'ர்ர்ர்ர்' என்ற ரீங்காரத்தோடு வீறிட்டு வடகோவைக்குள் நுழைந்து பாரதி பூங்கா ரோட்டில் திரும்பி -

'இந்த இருபது நாளில் குழந்தை சங்கீதா என் முகத்தை மறந்திருப்பாள்... என் முகத்தைப் பார்த்ததும் பூவாய் மலர்ந்து முன் பல் இரண்டையும் காட்டிக் கொண்டு அப்படியே தாவி என் கழுத்தைக் கட்டிக் கொள்ள மாட்டாளா... என்ன?'

ஆட்டோ அழகேசன் தெருவுக்குள் நுழைந்தது.

''எந்த ஊடம்மா...?''

''ஆட்டோவை இப்படியே நிறுத்திக்குங்க...''

நட்சத்திரா சொல்ல, டிரைவர் ஆட்டோவை ஒதுக்கி நிறுத்தினார். பர்ஸினின்றும் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு இரண்டு வீடு தள்ளியிருந்த தன் வீட்டை நோக்கி நடந்தாள் நட்சத்திரா. தன் வீட்டு வாசலை நெருங்கி காம்பௌண்ட் வேலிப் படலைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைய முயன்ற அதே விநாடி... எதிர்வீட்டு கதவு தாழ்ப்பாள் பளிச்சென்று விலகி... தண்ணீர் பக்கெட்டோடும், விளக்குமாறோடும் வெளியே வந்த சென்னம்மா

''ஆரது?'' என்று குரல் கொடுத்தாள்.

நட்சத்திரா அவளிடம் திரும்பி வந்தாள்.

''நான் தான் சென்னம்மா...''

''ஆரு நட்சத்திராவா?''

''ம்...''

''என்ன தாயி... இந்த நேரத்துல... வந்திருக்கே?''

''நேத்து ராத்திரி ரயில்ல புறப்பட்டேன்...''

''விஷயம் தெரிஞ்சு வந்திருக்கியா...? தெரியாமே வந்திருக்கியா?''

நட்சத்திரா திடுக்கிட்டாள்.

''விஷயமா? என்ன விஷயம்?''

''அப்ப நீ விஷயம் தெரியாமத்தான் வந்திருக்கே...?''

"சென்னம்மா... நீ என்ன சொல்றே...?"
"வாசல்ல நின்னு கத்தாதே... கொஞ்சம் உள்ளே
வாடியம்மா.." தண்ணீர் பக்கெட்டை வாசலிலேயே
வைத்து விட்டு நட்சத்திராவின் கையைப் பற்றிக்
கொண்டு தன் வீட்டுக்குள் நுழைந்தாள்
சென்னம்மா.

அடிவயிற்றில் புரள்கிற பதை பதைப்போடு
சென்னம்மாவைத் தொடர்ந்தாள் நட்சத்திரா. திகிலில்
இருதயம் ஸ்தம்பித்து ஸ்தம்பித்து ஓடியது.
சென்னம்மா சுவரோரமாய் நிறுத்தி வைத்துக்
கொண்டு கேட்டாள். "குழந்தையைப் பற்றி ஏதாவது
கடுதாசு எழுதிப் போட்டாங்களா?"
திக்கென்று நிமிர்ந்தாள் நட்சத்திரா.
"குழந்தையைப் பத்தியா...? இல்லையே..."
"பாவிங்க... நாசமாத்தான் போவாங்க..."
"சென்னம்மா... நீ என்ன சொல்றே? எனக்கு
ஒண்ணும் புரியலை..."
"அம்மாடி... நான் என்னம்மா சொல்லுவேன்...
அந்தப் பச்சப் புள்ளைய விட்டுட்டு நீ வேலைக்குப்
போன நாள்லேயிருந்து அது கதறின கதறல்
இருக்கே... தெரு பூராவும் கேட்கும்... கத்தி கத்தியே
அதுக்கு ஜொரமும் வலிப்பும் வந்து..."
"வந்து...?"
"பத்து நாளைக்கு முன்னாடிதான் செத்துப்
போச்சு..."

நட்சத்திராவுக்கு இருதயம் அடைத்துக்
கொண்டது. விழிகள் திக்கித்துப் போய்
சென்னம்மாவின் முகத்தின் மேல் நின்றது.
சென்னம்மா தொடர்ந்தாள். "குழந்தை செத்துப்
போனதை உம் புருஷனும் சரி... மாமனார் மாமியாரும்
சரி... யாரும் வெளியே சொல்லலை... சாயந்தரம்
செத்த குழந்தையை ராத்திரி பனிரெண்டு மணி
வரைக்கும் வெச்சிட்டிருந்து, அப்புறம்
திருட்டுத்தனமா வெளியே கொண்டு போய்
அடக்கம் பண்ணியிருக்காங்க... இந்த விவகாரம்
எனக்கு மட்டுந்தான் தெரியும்..."
நட்சத்திரா இன்னமும் அதே திக்கித்துப் போன
விழிகளில் சென்னம்மாவைப் பார்த்துக்
கொண்டிருக்க - சென்னம்மா தொடர்ந்தாள்.
"மறுநா காலையில் எட்டு மணிக்கு உம்
புருஷனும் மாமியாரும் சேர்ந்து ஒரு ட்ராமா
போட்டாங்களே பாரு... வாசல்ல உட்கார்ந்துக் கிட்டு



நல்லா விளையாடிட்டிருந்த குழந்தையைக்
காணோமாம்... யாரோ தூக்கிட்டுப் போயிட்டாங்
களாம்... இப்படியே சொல்லி எல்லாரையும் நம்ப
வெச்சு... போலீஸ்ல புகாரும் குடுத்திருங்காங்க..."
நட்சத்திரா இறுகின முகத்தோடு திரும்பி வாசல்
கதவை நோக்கி எந்திரத்தனமாய் நடந்தாள்.
"என்ன தாயி.. ஒண்ணும் பேசாமே போறே?"
"மூணு பேரும் வீட்ல தானே இருக்காங்க...?"
"உன்னோட மாமியாரும் மாமனாரும்... டூரிஸ்ட்
பஸ்ஸுல வடநாட்டு யாத்திரை போயிருக்காங்க...
உம் புருஷன் தான் வீட்ல இருக்கான்..."
"அந்தாளு போதும் எனக்கு..."
"அக்கம் பக்கம் விஷயம் பரவாமே... நிதானமாப்
பேசு... விஷயத்தை நான்தான் சொன்னேன்னு
சொல்லிடாதே... என்னை ரோட்ல பார்த்தா
உலுக்கிடுவான்..."
நட்சத்திரா புலம்பும் சென்னம்மாவுக்கு எந்த
பதிலும் சொல்லாமல் வாசல் கதவைத் திறந்து
கொண்டு வீதிக்கு வந்து தன் வீட்டு வேலிப்
படலையைத் தள்ளினாள்.
அது சிரமமான சத்தங்களோடு விலகியது.
உள்ளே நுழைந்தாள்.
"டொக்... டொக்..."
கதவு தட்டப்பட்டதுமே -
உள்ளே கிசுகிசுவென்ற பேச்சுக் குரல்கள்.
ஒன்று கணவனின் குரல்.
இன்னொன்று பெண் குரல்.
எங்கோ வெறித்துப் பார்த்தபடி
"டொக்... டொக்..." மறுபடியும் கதவைத்
தட்டினாள் நட்சத்திரா.
ரமேஷ் உள்ளிருந்து குரல் கொடுத்தான்.
"யாரது?"
நட்சத்திரா சத்தம் காட்டாமல் மறுபடியும் கதவைத்
தட்டினாள். "டொக்... டொக்..."
"யாரது...?"
"............"
உள்ளே கிசுகிசுப்புக் குரல்.
"நீ கட்டிலுக்குக் கீழே போயிடு. நான் போய் அது
யார்ன்னு பார்த்துட்டு வந்துடுறேன்..."
"நா வேணுமானா பின் பக்கமா போயிரட்டா...?"
"வேண்டாம்... இரு... நான் போய் பார்த்து
யாராயிருந்தாலும் பேசி அனுப்பிச்சிட்டு

வந்துடறேன்...''

''நான் கட்டிலுக்குக் கீழே போயிரட்டுமா?''

''உம் போ...''

''டொக்... டொக்...''

''யாருன்னு சொல்லித் தொலையலாமில்லையா?'' கத்திக் கொண்டே லுங்கியை இழுத்துக் கட்டியபடி நடந்து வந்து கதவைத் திறந்தான் ரமேஷ்.

பாதிக் கதவைத் திறந்தவன் -

அதிர்ந்து போய் பின்வாங்க -

நட்சத்திரா செலுத்தப்பட்ட மாதிரி உள்ளே நுழைந்தாள்.

''ந... ந... ந... நட்சத்திரா... நீ... நீ... நீயா?''

''நானே தான்...'' சொன்னவள் திரும்பி கதவை சாத்தித் தாழிட்டாள்.

''வ... வ... வர்ற மாதிரி லெட்டரே போ... போடலையே...?''

''மம்சாபுரத்துல கார்டு, கவர், ஸ்டாம்பு... எல்லாத்துக்கும் பஞ்சம்...'' சொல்லிக் கொண்டே படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

''கட்டில்ல குழந்தையைக் காணோம்... குழந்தை அத்தைகிட்ட படுத்து தூங்கறாளா...?''

ரமேஷ் வியர்த்து விறுவிறுத்துப் போயிருந்தான்.

''அ... அ.... அது வந்து நட்சத்திரா... அம்மாவும்... அப்பாவும்... ஒரு டூரிஸ்ட் பஸ்ஸில வடநாட்டு யாத்திரை போயிருக்காங்க...''

''அட.... எப்போ...?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி...''

''குழந்தையும் அவ கூட போயிருக்காளா...?''

''கு... கு... குழந்தை...?''

''ஆமா... குழந்தையைத் தான் கேக்கறேன்...''

''அ... அம்மாதான் எடுத்துட்டு போயிருக்கா...''

''உங்கம்மா எடுத்துட்டு போனாளா...? ஆச்சர்யமாயிருக்கே... ஆனா நான் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டேன்...''

''எ... எ... என்ன கேள்விப்பட்டே...?''

''குழந்தை காணாமே போயிட்டதா!''

ரமேஷின் வியர்வை அதிகமாகியது.

''யா... யார்... யார்... சொன்னா உனக்கு?''

''அசரீரி...''

ரமேஷ் கை கூப்பினான். ''ந... நட்சத்திரா... நீ நீ... தெ... தெ... தெரிஞ்சுதான் வ... விஷயம்... வந்திருக்கே போ...: போலிருக்கு... ப... ப... பத்து



நாளைக்கு மு... மு... முன்னாடி... ஒரு நா காலையில... நம்ம குழந்தை சங்கீதா வாசல்ல உக்காந்து வி... வி... விளையாடிட்டிருந்தா...''

நட்சத்திரா குறுக்கிட்டாள்.

''அ... அ... அந்த சமயத்துல யா... யாரோ... வந்து... குழந்தையை தூக்கிட்டுப் போயிட்டாங்க... அப்படித்தானே?''

''ஆ... ஆ... ஆமா...''

''சரி... இந்தத் தகவலை... எனக்கு ஏன் போன் மூலமாவோ... லெட்டர் மூலமாவோ தெரியப்படுத்தலை...?''

''அ... அம்மா தான் வேண்டாம்ன்னு சொன்னா...''

''ஏ... ஏன் வேண்டாம்ன்னு சொன்னாங்க...?''

''கு... குழந்தையை... நாம்பளே தேடி... க... கண்டு பிடிச்சுடலாம்... அநாவசியமா அ... அவளுக்கு லெட்டர் எழுதினா... அவ மனசு கஷ்டப்படும்ன்னு அ... அம்மா... சொ... சொன்னாங்க...''

''அடடா... எம்மனசு கஷ்டப்பட்டா... உங்களுக்கெல்லாம் தாங்காதாமோ? எனக்கு எப்பேர்ப்பட்ட கணவர், மாமியார், மாமனார்... வாய்ச்சிருக்காங்க...!''

''நட்சத்திரா... நீ போய் ரெஸ்ட் எடுத்துக்க... ராத்திரி பூராவும் தூங்காமே வந்திருப்பே போலிருக்கு... கண்ணெல்லாம் செவசெவேன்னு செவந்திருக்கு...''

''இருங்க... நான் கேள்விப்பட்ட இன்னொரு விஷயத்தையும் உங்கக்கிட்டே சொல்லிட்டு அப்புறமா தூங்கப் போறேன்...''

''சொல்லு... சொல்லு...''

''நம்ம குழந்தை... என்னோட ஞாபகத்தாலேயே... கதறிக் கதறி ஜுரம் வந்து வலிப்பு வந்து செத்துப் போனதாகவும் இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா தெரு ஜனம் காறித் துப்புவாங்கன்னு பயந்துக்கிட்டு பொணத்தை மறைவா வெச்சு... ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேலே திருட்டுத்தனமா எங்கியோ கொண்டு போய் அடக்கம் பண்ணினதாகவும்...''

ரமேஷ் வெகுண்டு போய் நிமிர்ந்தான்.

''யா... யார்... யார்... சொன்னா உனக்கு?''

''அசரீரி...''

''ந... ந... ந... நட்சத்திரா...''

''த்தூ...! நீயெல்லாம் ஒரு மனுஷனா?'' வாய் நிறைய எச்சிலை வாங்கி 'ச்சொத்' என்று ரமேஷின் மேல் உமிழ்ந்தாள் நட்சத்திரா.

ரமேஷ் முகத்தில் கம்பி கம்பியாய் வழிந்த எச்சிலைத் துடைத்துக் கொண்டே ஆக்ரோஷமாய் நிமிர்ந்தான். நட்சத்திரா பொரிந்தாள்.

''கட்டிலுக்குக் கீழே உடம்புல துணி இல்லாமே ஒருத்தி திருட்டுத்தனமா முடங்கியிருக்காளே... அவளை மொதல்ல வெளியே வரச் சொல்லு... குழந்தை செத்ததை நீ எவ்வளவு கோலாகலமா கொண்டாடிட்டிருக்கேன்னு நான் காட்றேன்...''

அந்தப் பெண் கட்டிலுக்குக் கீழேயிருந்து மெல்ல மெல்ல வெளியே வந்தாள்.

நட்சத்திரா கை சொடுக்கி அவளைக் கூப்பிட்டாள். அவள் தயக்கமாய் நெருங்கி வந்தாள்.

''மொதல்ல சேலையை ஒழுங்கா கட்டு...''

அவள் கட்டிக் கொள்ள ஆரம்பித்தாள். நட்சத்திரா இடுப்பில் கை வைத்துக் கொண்டு கேட்டாள், ''உம்பேரென்ன?''

''சுசீலா...''

''தொழில்காரியா? இல்லே புருஷனுக்கு துரோகம் பண்றவளா?''

''தொழில்காரிதான்...''

''பேசின ரேட் எவ்வளவு?''

''..........''

''சொல்லு... ரேட் எவ்வளவு?''

''நூறு...''

''வாங்கிட்டியா...?''

''இ... ல்... ல...''

நட்சத்திரா ப்ளவுஸுக்குள் கையை நுழைத்து பர்ஸை எடுத்து நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து அவள் கையில் வைத்தாள்.

''போ... இனிமே... இவர் உனக்கு பிரயோஜனப்பட மாட்டார்'' பின் பக்க வாசலைக் காட்டினாள் நட்சத்திரா.

அவள் போனதும் ரமேஷ் சீற ஆரம்பித்தான்.

''என்னடி... ஊர் விட்டு ஊர் போனதும் புதுசா தைரியம் வந்திருக்கு?''

நட்சத்திரா பதிலொன்றும் பேசாமல் சமையலறைக்குள் நுழைந்தாள். ரமேஷ் தொடர்ந்தான். ''அங்கே எவனையாவது வெச்சிட்டிருக்கியா...? அதான் இந்தத் துள்ளு துள்ளறே?''

''ஆமான்டா... ஊர்க்கு ஊர் ஒருத்தனை வெச்சுட்டுத்தான் இருக்கேன்... ஊருக்கு ஒருத்தன்



இருக்கும்போது... நீ எதுக்கு அநாவசியமாய்... போய்ச் சேர்...''

சொல்லிக் கொண்டே சுவரின் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த அந்த அரிவாள்மணையை எடுத்து விநாடிக்கும் குறைவான நேரத்தில் ஒரு வீச்சு வீசினாள் நட்சத்திரா. ரமேஷ் ஸ்தம்பித்து கழுத்தில் கெட்டியாய் ரத்தம் காட்டி மடங்கி முழந்தாழிட்டு விழ ரத்தம் தோய்ந்த அரிவாள்மணையோடு நிதானமாய் அவனை நெருங்கினாள். அவன் கிராப்பைப் பற்றி தூக்கி அறுபட்ட கழுத்தை அதே இடத்தில் கரகரவென்று அறுத்தாள். தலை தனியாய் கைக்கு வர வலது கையில் ரத்தம் சொட்டும் அரிவாள்மணையோடும் இடது கையில் ரமேஷின் உதிரம் உதிரும் தலையோடும் வெளியே வந்தாள்.

அந்த விடிகாலை நேரத்தில் அழகேசன் தெருவில் வீடு தோறும் வாசல் பெருக்கி நீர் தெளித்து கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண்கள் அலறிக் கொண்டு வீட்டுக்குள் ஓட ரத்தம் சொட்டும் தலையோடும், அரிவாள்மணையோடும் பக்கத்து தெருவிலிருந்த எஸ்2 போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் நட்சத்திரா.

(முற்றும்)

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜீ. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5. தொலைபேசி: 28544294
ஆசிரியர்: ஜீ.அசோகன்.